அறிவோம்
தெளிவோம்
பகிர்வோம்


பூ 2 : இதழ் 4
2024 ஐப்பசி - மார்கழி

ISSN 2961-5712

# இலக்கணம்

காலாண்டுச் சஞ்சிகை - 8

சஞ்சிகை ஆசிரியர்: த.யுவராஜன்



அகவை எண்பதில் காலடி பதித்துள்ள
தமிழ் இலக்கண ஆசானும் மொழியியல் வல்லுநருமான
பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்
அவர்களை
இலக்கணம் சஞ்சிகை வாழ்த்துகின்றது.

அபிராமி வெளியீடு
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கணம்

காலாண்டுச் சஞ்சிகை - 8

பூ 2: இதழ் 4

2024 ஐப்பசி – மார்கழி

சஞ்சிகை ஆசிரியர்:

த. யுவராஜன்

முகவரி: ஆசிரியர், இலக்கணம்,
515 / 161, திருமலை வீதி,
மட்டக்களப்பு - 30000, இலங்கை.

விலை: 300.00

வெளியீட்டுத் திகதி: 22. 10. 2024

* அபிராமி வெளியீடு, மட்டக்களப்பு, இலங்கை.

❖

**ILAKKANAM**

Quarterly Magazine - 8

Poo 2 : Ithal 4

2024 October- December

**EDITOR:**

**D. Juwarajan**

**ADDRESS:** The Editor, Ilakkanam,
515 / 161, Trinco Road,
Batticaloa - 30000, Sri Lanka.

**Price:** LKR 300.00

**Published on:** 22.10.2024

* Abiramie Publication, Batticaloa, Sri Lanka.

மின்னஞ்சல்: djuwan58@gmail.com

கைத்தொலைபேசி: +94714496681


இச்சஞ்சிகையில் இடம்பெறும் படைப்புக்களுக்கு அவ்வப் படைப்பாளியே பொறுப்பாவார்

## ஆசிரியரிடமிருந்து...

இந்த எட்டாவது இதழுடன் 'இலக்கணம்' சஞ்சிகை தனது இரண்டாவது வருடத்தைப் பூர்த்திசெய்கின்றது. இது மகிழ்ச்சிகொள்ளும் தருணம். காலாண்டுச் சஞ்சிகையாகிய 'இலக்கணம்' இரண்டு வருடமும் தடையின்றிச் சீராக வெளிவந்துள்ளது. அதற்குக் காரணம் உங்களின் ஆதரவும் இலக்கணத்தின் தேவையை உணர்ந்து, நீங்கள் தரும் ஆக்கங்களுமே.

வாய்மூலமாகவும் எழுத்துமூலமாகவும் கேட்டுக் கொண்டேயிருக்கின்றேன். சிலரிடமிருந்து ஆக்கங்கள் கிடைக்கவேயில்லை. இருப்பினும் தொடர்ந்து முயல்வோம்; வெல்வோம்; படைப்போம்.

2024ஆம் வருடத்துக்கான சந்தா இந்த இதழுடன் முடிவுக்கு வருகின்றது. எனவே சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பதை அன்புடன் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். 2025க்குரிய சந்தா வழமை போல் (4 x 300.00 = 1200.00). தபாலில் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் மேலும் (4 x 150.00 = 600.00). செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆக, (1200.00 + 600.00 = **1800.00**) என்பதைக் கவனத்திற்கொண்டு 2024.11.30க்கு முன்னர் செலுத்துவீர்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு தனிப்பிரதி பெறுபவர்களும் சந்தாதாரர் ஆகுவீர்களென எதிர்பார்க்கப்படுகின்றது. (இந்த விடயம் இலங்கைச் சந்தாதாரர்களுக்கானது.)

சந்தா செலுத்திப் பெற்றுக்கொள்பவர்களுக்கும் தனிப்பிரதி பெற்றுக்கொள்பவர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

பன்முக ஆளுமை கொண்ட பெருந்தகைகளுள் முக்கியமான ஒருவர் பேராசிரியர் எம்.ஏ.நு∴மான் (10. 08. 1944) அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் இலக்கணம், மொழியியல் தொடர்பான கட்டுரைகளை, நூல்களைத் தந்தவர். இந்த இடத்தில் எடுத்துக்காட்டுக்காக "அடிப்படைத் தமிழ் இலக்கணம்" என்ற நூல் குறிப்பிட்டுச் சொல்லப்படுகின்றது. கருத்துக்கள் சொல்ல, சுதந்திர வெளியை ஏற்படுத்திக் கொடுப்பதற்குப் புலமைத்துணிவு வேண்டும். அது இருப்பதனாலேதான் இவர் இன்றும் மிளிர்கின்றார். அவரது இலக்கணப்பணி தொடரட்டும். அகவை எண்பதில் காலடி பதித்துள்ள பேராசிரியர் எம்.ஏ.நு∴மான் அவர்களை வாழ்த்துவதோடு அவரைக் கௌரவப்படுத்தும் நோக்கில் அவர்தம் புகைப்படத்தை, இலக்கணம் சஞ்சிகை தனது முன்னட்டையில் பிரசுரித்திருக்கின்றது.

- த. யுவராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- மயிலைநாதரின் தனித்தமிழ்ச் சிந்தனை -- 03
- தொல்காப்பியர் கூறும் மொழி முதல் எழுத்துக்கள் -- 06
- தமிழில் மொழியசை -- 08
- மொழி -- 11
- இலக்கணம் கற்பித்தல் -- 12
- தமிழ் இலக்கண நூல் அறிமுகம்: 2 -- 13
- தொல்காப்பியம் - நூன்மரபு (பைத்தான்வழி உரை - 3) -- 14
- சிங்கப்பூர்ப் பள்ளிகளிலே தொடக்கநிலைகளில் பயன்பாட்டு இலக்கணம் - ஒரு பார்வை (தொடர் 2) -- 18
- தொல்காப்பியத்தில் மெய்ப்பாடு -- 22
- யாப்பிலக்கணம் (தொடர் 5) -- 26
- க.பொ.த (உயர்தரம்) - தமிழ் -- 31
- க.பொ.த (சாதாரண தரம்) - தமிழ்மொழியும் இலக்கியமும் -- 32




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலைநாதரின் தனித்தமிழ்ச் சிந்தனை



**பேராசிரியர் பா.மதிவாணன்** (பணி நிறைவு)
**(Professor B.Mathivanan - Retired)**
*தமிழியல்துறை,*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்,*
*திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா*

**இ**யல், திரி, திசைச்சொற்களாகிய தமிழ்ச் சொற்களோடு தம் காலத்தில் நிலவிய (பிராகிருத, பாலி, சமற்கிருதமாதி[1]) வடசொற்களையும் விலக்காமல் செய்யுளீட்டச் சொற்களாக ஏற்று, வட எழுத்தை மட்டும் விலக்கி இலக்கண இலக்கிய மரபுகளின் அடிப்படையில் **தமிழின் தனித்தன்மை**யை நிறுவியது, தொல்காப்பியம். சமற்கிருத வன்மேலாண்மைக் காலத்தில் முதன்முதலாகக் கருத்தளவில் வடசொல் கலவாத் **தனித்தமிழுக்கு** வித்திட்டார், நன்னூலின் முதலாவது உரையாசிரியரான மயிலைநாதர்.

பிற்சோழர் காலப் (பொதுக்காலம் 850 - 1270) பேரரசில் வழங்கிய மொழிகளென ஏழு மொழிகளைக் குறிப்பிடலாம். இவை தவிர தென்கிழக்காசிய நாடுகளுடன் பேரரசு கொண்டிருந்த வணிக நட்புறவுகளால் வேறு பல இந்தோ ஆரிய, திபெத்திய, பர்மிய மொழிகளும் அறிமுக மாயிருந்தன. மேலும் பல்லவர்காலந் தொட்டே சமயம் ('தேவ'பாடை), இலக்கியம், மெய்யியல் முதலிய பண்பாட்டு நடைமுறைகளில் சமற்கிருதச் செல்வாக்கு மேலோங்கித் தொடர்பு மொழியின் தேவையையும் நிறைவு செய்தது.[2]

11ஆம் நூற்றாண்டில் சோழப்பேரரசன் பேரால் 'வடமொழிவழித் தமிழ் இலக்கண'மாக வீரசோழியம் தோன்றியது. அதே நூற்றாண்டில் தொல்காப்பிய மரபில் அதன் சுருக்கம் எனத் தக்க நேமிநாதமும் தோன்றியது.

*மன்னியசீர் வடநூலிற் ... ...*
*... ... போலிபோலத் தொகு தமிழ்க்கும்*
*பன்னிய தாதுக்களைப் படைத்துக் கொள்க ....*

என்பது வீரசோழியத் தாதுப்படலத்தின் முதற் காரிகை.

வீரசோழிய ஆசிரியர் புத்தமித்திரனாரின் மாணாக்கரும் உரையாசிரியருமான 12ஆம் நூற்றாண்டின் பெருந்தேவனார், "தமிழ்ச்சொல்லிற்கு எல்லாம் தாயாகி நிகழ்கின்றமையின், அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக்கும் பெறும்" என்று அடித்துச்சொல்லித் தமிழின் தனித் தன்மையை அசைத்துப்பார்த்தார். உடனே தம் கூற்றுக்கு முரணாக, "அவை மூன்று வகைப்படும். அவையாவன தமிழ்த் தாதுவும் வடமொழித் தாதுவும் திசைச்சொல் தாதுவுமாம்" என்றது, தமிழ் மரபு அவரை அசைத்துப்பார்த்த தனிக் கதை.

நேமிநாதமோ அதன் உரையோ, செய்யுளீட்டச் சொற்களுக்குத் தனித்தமிழ் சார்ந்து விளக்கம் தரவில்லை. தொல்காப்பியம் தமிழின் தனித்தன்மை கருதியதேயன்றித் தனித்தமிழ் கருதாமையால் தொல்காப்பிய உரையாசிரியர்களுக்கும் தனித்தமிழைக் கருதும் வாய்ப்பில்லை.

சோழப்பேரரசு சரிந்துகொண்டிருந்த 13ஆம் நூற்றாண்டில் (சோழரொடு முரணியோருள் ஒருவனாகிய ?) சீயகங்கன் என்னும் சிற்றரசன் வேண்டுகோளுக்கிணங்கிப் பவணந்தி தமிழிலக்கணத்தை, 'முன்னோர் நூலின் வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்' என்கிறது சிறப்புப் பாயிரம்.

பவணந்தி வடமொழிச் செல்வாக்கையும் அதன் தாக்கத்தையும் சோழப்பேரரசு காலத்தில் புழங்கிய பிறமொழிகளையும் கணக்கில் கொண்டாலும் இயன்றவரை தமிழ்மரபு பேணி, தோன்றிய நாள்தொட்டுச் செல்வாக்குக் குன்றாத, நல்ல நூலாக நன்னூலை இயற்றினார்.

*இயற்சொல் திரிசொல் இயல்பின் பெயர்வினை*
*எனஇரண்(டு) ஆகும் இடைஉரி அடுத்து*
*நான்குமாம் திசைவட சொல்அணு காவழி.*
(நன்னூல் 269)

என்னும் நூற்பாவில் நான்கு கருத்துக்கூறுகளைக் காணலாம்.

1. இயற்சொல், திரிசொல்
2. பெயர், வினை(ச் சொற்கள்) என இரண்டு
3. இடை, உரி(ச் சொற்கள்)[ஆக] நான்கு
4. திசை, வடசொற்கள் அணுகாவழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர், வினை இரண்டு; அடுத்து இடை, உரியோடு நான்கு என இருவகைப்படுத்தி. இவற்றுக்கு மட்டுமே தொகை கொடுத்திருக்கிறார் பவணந்தியார்; இயல், திரி சொற்களுடன் திசை, வடசொற்களை ஒருங்கு கூறினாரல்லர்.

மயிலைநாதர், "திசைச்சொல் வடசொல் அணுகாவழி'. எனவே இப்பகுதிப்படுவது தமிழ்நாட்டிற்குரிய சொல்லென்பதூஉம் திசைச்சொல்லும் வடசொல்லும் ஈண்டுச் சேரவும் பெறுமென்பதூஉம் சேர்தல் ஒருதலையன்மையின் அவற்றிற்கு இலக்கணம் ஈண்டுக் கூறார் என்பதூஉமாயிற்று" என விளக்குகிறார். "சேரவும் பெறும்" என எதிர்மறையும்மையாற் கூறுவதும் 'திசை, வடசொற்கள் ஒருதலையல்ல'(கட்டாயமல்ல), என்பதும் நோக்கத்தக்கன.

நன்னூலிலுள்ள சிக்கல் ஒன்றையும் கருதுதல் வேண்டும்.

*செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும்*
*தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி*

(தொல்.எச்ச 394)

என்னும் தொல்காப்பிய நூற்பாவை அடியொற்றி,

*செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்*
*ஒன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினும்*
*தங்குறிப் பினவே திசைச்சொல் என்ப*

(நன்னூல் 272)

எனச் செந்தமிழ் சேர்ந்த பன்னிரு வட்டாரக் கிளைமொழிகளோடு, தம்காலத்தில் புழங்கிய தமிழொழிந்த பிறமொழிகளையும் ஒருங்கே திசைச்சொல் எனத் தோன்றுமாறு நூற்பா யாத்துவிட்டார். ஆனால் மயிலைநாதர், "செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரு நிலத்தினும் [செந்தமிழ், கொடுந்தமிழ் என்னும்] இருவகைத் தமிழாம் ஒருமொழி நிலத்தை யொழிந்த பதினேழ் நிலத்தினும் ... வழங்குவனவற்றைத் திசைச்சொல்லென்று சொல்லுவர் ஆசிரியர்" என்று தெளிவுபடுத்துகிறார். அஃதாவது பன்னிரு நிலத்துக் கொடுந்தமிழ், பதினெட்டுள் ஒன்றாகிய செந்தமிழ் ஆகியவை ஒழிந்த பதினேழு மொழிகள்தாம் திசை மொழிகள்.

செய்யுளை வரையறுக்கும் 'பல்வகைத்தாதுவின்...' என்னும் நூற்பா (267) உரையில் 'பலசொல்'லாவன எனப் பட்டியலிட்டு விரிவாக விளக்கி, "எழுத்ததிகாரத்துட் செய்யுட்கென்று விதந்தோதினவு முதலான செய்யுட் சொற்களும் இவையல்லா வழக்குச் சொற்களும் வடசொற்களுமெனக் கொள்க" என்கிறார் மயிலைநாதர். அங்கும் திசைசொற்களின் வேறாகச் செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தின் வழக்குச் சொற்களை அவர் கருதியுள்ளார். இஃது [வடசொல்] ஒரு நிலத்திற்கே யுரியதன்றிப் பதினெண் பூமிக்கும் விண்ணிற்கும் புவனாதிகட்கும் பொதுவாய் வருதலின், திசைச்சொல்லின் அடக்காது வேறோதினாரென்க" என்கிறார் மயிலைநாதர். தமிழல்லாத் திசைமொழிகளுள் ஒன்றாக வடமொழியைக் கொள்ள இடமுண்டு என்பது பொருள். இக்கருத்தைச் சங்கர நமச்சிவாயர் முதலிய உரையாசிரியர்களும் வழிமொழிந்துள்ளனர்.

காலப்போக்கிலான மொழி மாறுதல்களைக் கணக்கில்கொண்டு முந்துநூல் கண்டு எழுத்து சொல்லதிகாரங்களைத் தமிழ்மரபுணர்வோடு படைத்தவர், பவணந்தி. மரபில் தனித்தமிழின் வித்தை இனங்கண்டவர், மயிலைநாதர். மேலும், பிற திராவிடமொழி இலக்கணங்களின் செய்யுட் சொல்வகைப்பாட்டை நோக்கினால் தமிழ்மரபின் தனித்தன்மையை உணரமுடியும்.[3]

பொதுக்காலம் 13ஆம் நூற்றாண்டில் கேத்தனா இயற்றிய தெலுங்கு இலக்கண நூலான 'ஆந்திர பாஷா பூஷணம்' தெலுங்குச் சொற்களை (1) தற்சமம் (2) தற்பவம் (3) அச்ச தெலுகு (4) தேசியம் (5) கிராமியம் என்று வகைப்படுத்துகிறது.

15ஆம் நூற்றாண்டில் சமற்கிருதமொழியில் எழுதப்பட்ட 'ஆந்திர சப்த சிந்தாமணி' என்னும் தெலுங்கு இலக்கண நூல் (1) தஜ்ஜா (2) சமா (3) தேசியம் (4) கிராமியம் என்று வகைப்படுத்தியுள்ளது.

கன்னடமொழியில் 14ஆம் நூற்றாண்டில் கேசிராஜா என்பவர் எழுதிய 'சப்தமணி தர்ப்னா' (1) சம சமகிஸ்கிருதா (2) அபபிரம்சா (3) தற்சமா (4) தேசியம் (5) கிராமியம் என்று வகைப்படுத்தியுள்ளது.

14ஆம் நூற்றாண்டில் சமற்கிருதத்தில் எழுதப்பட்ட மலையாள இலக்கண நூலான லீலா திலகம் (1) தேசி (2) சமஸ்கிருத பவா (3) சமஸ்கிருத சமா என வகைப்படுத்துகிறது. இதில் தேசி முதலில் இருந்தாலும் அடுத்துச் சமற்கிருதம் இரண்டு வகைகளில் இடம்பிடித்துக்கொள்கிறது.

17ஆம் நூற்றாண்டில் பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து என்னும் இரண்டு வடமொழிவழித் தமிழ் இலக்கண நூல்கள் எழுந்தன.

பிரயோக விவேகம், "தற்பவந் தற்சமமே பெரும் பான்மையுஞ் சாற்றினமே"(2) என்றது. ஆனால் வடசொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவதாக - இறுதியாக இடம்பெறுவதே தமிழ்மரபு.

தென்னிந்திய மொழிகளின் இந்த வகைப்பாட்டு மரபே ஃபிரான்சிஸ் வைட் எல்லிஸுக்கு (1777 - 1819) அம்மொழிகளின் சமற்கிருதம்சாராத் தனித்தன்மை காணத் துணைநின்றது.

மாமிடி வெங்கையா தொகுத்த 'ஆந்திர தீபகம்' என்னும் தெலுங்கு அகராதியின் தத்சமம், தத்பவம், தேசியம், கிராமியம் என்னும் வகைகள் கொண்டு விரிவான எடுத்துக்காட்டுகள் தந்து, சமற்கிருதத்தோடு தென்னிந்திய மொழிகளின் சொற்றொடர்க் கட்டமைப்பையும் ஒப்பிட்டுத் தென்னிந்திய மொழிகள் தனி மொழிக் குடும்பம் சார்ந்தவை என்று நிறுவினார் எல்லிஸ்[5].

பின்னால், இராபர்ட் கால்டுவெல் (1814 - 1891) விரிவாக ஆராய்ந்து திராவிட மொழிக் குடும்பம் (1856) எனப் பெயரிட்டுத் தனித்தன்மையை நிலைநாட்டினார். இது, பின்வந்த அறிஞர்களால் மேலும் ஆராயப்பட்டு விரிவும் செழுமையும் உறுதியும் பெற்றது.

சாமிநாத தேசிகர் தம் இலக்கணக் கொத்தில் போகிற போக்கில் எழுப்பிய வினா,

*அன்றியும் தமிழ்நூற்கு அளவு இலை; அவற்றுள்*
*ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ*

(பாயிரவியல் 7 : 25 - 26)

என்பது. அந்த நூற்றாண்டில் அதை யாரும் எதிர்கொள்ளத் துணிந்திருக்கமாட்டார்கள். அந்த வினாவுக்கு வரலாறு விடை கண்டது.

திரவிட மொழிக் குடும்பக் கண்டுபிடிப்பும் சங்கச் சான்றோர் செய்யுள்களின் மீட்சியுமாகிய புறத்தூண்டல் களால், ஆறு நூற்றாண்டுக்குமுன் இடப்பட்ட தனித்தமிழ் வித்து, தனித்தமிழ் இயக்கமாக எழுச்சியுற்றது. இந்த இயக்க வரலாற்றில் மயிலைநாதர் நினைவுகூரப்பட வேண்டியவர் ஆவார்.

## குறிப்புகள்

1. "வடசொல் என்றதனால் தேய வழக்காகிய பாகதச் சொல்லாகி வந்தனவும் கொள்க" என்கிறார் தெய்வச்சிலையார் (தொல்காப்பியம், எச்சவியல் 5 உரை) சமற்கிருத மேலாண்மை காரணமாக வடமொழி என்றாலே சமற்கிருதம் என்றாகிவிட்டது.

2. நன்னூலின் பழைய உரையாசிரியர் மயிலைநாதர் அவருடைய உரையில் காணப்படும், "இதற்குப் பிறவாறு சொல்லுவாரும் உளர்." (நன். 271) என்பது போன்ற சொல்லாட்சி மயிலைநாதருக்கு முன்போ அவர் காலத்திலோ நன்னூலுக்கு வேறு உரை இருந்திருக்கலாம் என்ற கருத்தைத் தோற்றுவிக்கிறது. அது ஆசிரியர் மாணவர் வழியில் வாய்மொழியாக வழங்கிய உரையா? எழுத்து வடிவில் ஏட்டில் நிலவிய உரையா என்று சொல்வதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. எனவே கிடைத்துள்ள உரைகளில் மயிலைநாதர் உரையே காலத்தால் முந்தியது. அ.தாமோதரன்(பதிப்பாசிரியர்), 'பதிப்புரை', பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயர் செய்து சிவஞான முனிவரால் திருத்தப்பட்ட புத்தம் புத்துரை என்னும் விருத்தியுரையும், ப. 21.

3. சு.இராசாராம், **இலக்கணவியல்: மீக்கோட்பாடும் கோட்பாடுகளும்**, ப. 203 - 217.

4. செ.வை.சண்முகம், 'திராவிட மொழிகளில் சொல் வகைப்பாடு' (அச்சில் வராத கட்டுரை)

5. *F.W.Ellis, 'Note to the Introduction', A* ***Grammar of the Teloogoo Language*** *by A.D.Campbell, pp. 1 - 31.*

## துணைநூல்கள்

இராசாராம், சு, **இலக்கணவியல்: மீக்கோட்பாடும் கோட்பாடுகளும்**, காலச்சுவடு, நாகர்கோவில், 2010.

கோபாலையர், தி.வே.(பதிப்பாசிரியர்) புத்தமித்தரனார் இயற்றிய வீரசோழியமும் பெருந்தேவனார் இயற்றிய உரையும், ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆஸ்ரமம், சென்னை, 2005.

சண்முகம், செ.வை. 'திராவிட மொழிகளில் சொல் வகைப்பாடு' (அச்சில் வராத கட்டுரை)

சாமிநாதையர், உ.வே (பதிப்பாசிரியர்), நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும், வை.ஜயந்தி அச்சுக்கூடம், சென்னை, 1918.

தாமோதரன், அ., (பதிப்பாசிரியர்), பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயர் செய்து சிவஞான முனிவரால் திருத்தப்பட்ட புத்தம் புத்துரை என்னும் விருத்தியுரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1999.

வேங்கடாசலம்பிள்ளை, *R*, (பதிப்பாசிரியர்), தொல்காப்பியம் சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை, கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர், 1929.

*Campbell, A.D., A Grammar of the Teloogoo Language, Asian Educational Services, 1991, [reprint of the third ed. (1849), (First ed. 1816.)]*

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்காப்பியர் கூறும் மொழி முதல் எழுத்துக்கள்



**தி.முகிலன்,**
(T.Muhilan)
*தமிழ் சிறப்புக்கற்கை மாணவன்,*
*மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு,*
*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*

உலக மொழிகள் அனைத்தும் தாம் தோன்றிய காலத்தில் இருந்து தற்காலம்வரை பல மாற்றங்களைப் பெற்று வந்துள்ளன. மாற்றம் அடையாத மொழி என்று எந்த ஒரு மொழியினையும் கூறவிட முடியாது. வாழுகின்ற மொழி எதுவாயினும் அது மாற்றம் அடைந்தே காணப்படும். தமிழ்மொழியும் இம்மொழிமாற்றத்திற்கு விதிவிலக்கல்ல. தமிழ்மொழியும் தான் வாழ்ந்த காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல மாற்றங்களைப் பெற்று வந்துள்ளமையினை மொழி வரலாற்றில் தமிழ்மொழியினைப் பழந்தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ் எனப் பாகுபடுத்தியதை வைத்து அறிந்துகொள்ளலாம். தொல்காப்பியர் காலம்முதல் தற்காலம் வரை தமிழ்மொழியிலே மாற்றம் நிகழ்ந்தவண்ணமே உள்ளது.

தமிழ்மொழியிலே எல்லா எழுத்துக்களும் மொழி முதலில் வருதில்லை. எந்த எந்த எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வரவேண்டும் என்பதனை இலக்கணகாரர்கள் எமக்குத் தெளிவுபடுத்திச் சென்றுள்ளனர். அந்தவகையில் தொல்காப்பியர் மொழி முதல் எழுத்துக்களைப் பாகுபடுத்திக் காட்டும் வேளையிலே பின்வருமாறு கூறிச்செல்கிறார்.

### 1. மொழிக்கு முதலில் வரும் உயிர் எழுத்துகக்கள்

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களுமே மொழிக்கு முதலில் வருகின்றன. இதனைத் தொல்காப்பியர்,

*“பன்னீர் உயிரும் மொழிமுதல் ஆகும்”*

எனக் கூறியுள்ளார்.

உதாரணம் : அ: அம்மா, ஆ: ஆடு, இ: இலை, ஈ: ஈசல், உ: உரல், ஊ: ஊஞ்சல், எ: எட்டு, ஏ: ஏணி, ஐ : ஐம்பது, ஒ: ஒட்கம், ஓ : ஓலை, ஔ : ஔடதம்

இதனைத் தொடர்ந்து. *“உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா.”* எனும் சூத்திரத்தைத் தருகின்றார்.

இது, தொல்காப்பியர் காலத்திலே மெய் எழுத்துக்கள் மொழிக்கு முதலில் தனித்து வருதில்லை என்பதைக் காட்டுகின்றது. ஆனால் சில மெய் எழுத்துகள் உயிர் எழுத்துக்களுடன் சேர்ந்து உயிர்மெய் நிலையில் முதலிலே வருகின்றன. அதற்காக உயிர்மெய் எழுத்துக்கள் முதலில் வருகின்றன என்று எடுத்துக்கொள்ளக்கூடாது.

### 2. உயிருடன் மொழி முதலாகும் மெய்கள்

மெய் எழுத்துக்கள் மொழிக்கு முதலில் தனித்து வருவதில்லை எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். சில மெய் எழுத்துக்கள் உயிர் எழுத்துக்களுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வருகின்றன. அவ்வாறு வரும் பொழுது எல்லா மெய்யும் எல்லா உயிருடனும் சேர்ந்து வருவதும் இல்லை.

ஒருசில மெய் எழுத்துக்கள் பன்னீர் உயிர் எழுத்திலே ஒரு சில உயிர் எழுத்துக்களுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வருவதனைக் காணலாம்.

கதநபம என்னும் ஐந்து எழுத்தும் பன்னிரண்டு உயிருடனும் சேர்ந்து மொழிக்கு முதலில் வருகிறது. இதனை,

*“க த ந ப ம எனும் ஆவைந்து எழுத்தும்*
*எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே”*

என்னும் தொல்காப்பிய சூத்திரம் சொல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் :

க – கடல், காதல், கிளி, கீரை, குயில், கூடு, கெண்டை, கேள்வி, கை, கொக்கு, கோப்பி, கௌரி

த – தந்தை, தாய், தித்தி, தீமை, துணி, தூது, தெற்றி, தேன், தையல், தொண்டை, தோடு, தௌவை

ந – நண்டு, நான்கு, நிலம், நீலம், நுதல், நூல், நெற்றி, நேயம், நைவளம், நொச்சி, நோக்கு, நௌவி

ப – பட்டம், பாடம், பிழை, பீடை, புல். பூ, பெயர், பேய், பைதல், பொய், போது, பௌவம்.

ம – மன்னன், மாமா, மின்னல், மீன், முலை, மூலை, மெய், மேனி, மையல், மொழி, மோத்தை, மௌவல்

இவ்வாறு பன்னிரு உயிருடனும் கதநபம எனும் ஐந்து எழுத்தும் மொழிக்கு முதலில் வருவதனைக் காணலாம். இனி, குறிப்பிட்ட சில உயிர்களுடன் மாத்திரம் இணைந்து வரும் மெய் எழுத்துக்களைக் காண்போம்.

**3. சகர மெய் வருதல்:** அ, ஐ, ஔ என்னும் மூன்றையும் தவிர்த்து ஏனைய உயிர்களுடன் சேர்ந்து வரும்.

**4. வகர மெய் வருதல்:**

வகர மெய்யானது உ ஊ ஒ ஓ என்னும் நான்கு உயிர்களுடனும் மொழிக்கு முதலில் வருவதில்லை. இதனைத் தொல்காப்பியர்,

*"உ ஊ ஒ ஓ என்னும் நான்கு உயிர்*
*வ என் எழுத்தொடு வருதல் இல்லை."*

எனக் கூறியுள்ளார். ஏனைய உயிர்களான அ ஆ இ ஈ எ ஏ ஐ ஔ ஆகியவற்றுடன் மொழிக்கு முதலில் வருகிறது.

உதாரணம் : வடை, வாசல், விலை, வீடு, வெற்றி, வேங்கை, வைதல், வௌவால்.

**5. ஞகர மெய் வருதல்**

ஆ எ ஒ எனும் மூன்றுயிர்களும் ஞகார ஒற்றுக்களோடு மொழ்க்கு முதலில் வருகிறது.

*"ஆ எ ஒ எனும் மூவுயிர் ஞகாரத்து உரிய"*

உதாரணம் : ஞாலம், ஞெண்டு, ஞொள்கிற்று.

**6. யகர மெய் வருதல்**

ஆகாரத்தோடன்றிப் பிற உயிர்களோடு யகரம் மொழிக்கு முதலில் வருதல் இல்லை. இதனைத் தொல்காப்பியம் 32 நூற்பா *"ஆவோடு அல்லது யகரம் முதலாது"* எனக் கூறுகிறது.

உதாரணம் : யானை, யாண்டு, யாடு

இவ்வாறு தொல்காப்பியர், மொழிக்கு முதலில் வரும் உயிர் எழுத்துக்களையும் மெய் எழுத்துக்களையும் பகுத்துக்காட்டியுள்ளார். மேலும் *"முதலா ஏன தம்பெயர் முதலும்"* என்பதனூடு மொழிக்கு முதலில் வராது எனக் கூறப்பட்ட பிற மெய்களும் தம்பெயர்களைச் சுட்டும் பொழுது மொழிக்கு முதலிலே வருவதனைக் காணலாம்.

உதாரணம் : நுகாரம், தகாரம், டகாரம்....

கால மாற்றம், பண்பாட்டு மாற்றங்கள் மொழியினையும் மாற்றியமைப்பதனைக் காணலாம். தற்காலத்திலே தொல்காப்பியம் கூறிய, மொழி முதல் எழுத்துக்களிலே பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமையினைக் காணலாம். பிற மொழியின் கலப்பின் காரணமாகத் தனி மெய் எழுத்துக்கள் சில தற்காலத்திலே மொழியின் முதலில் இடம் பெறுகின்றன.

மொழி மாற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். பழைய விடயங்களைத் தவிர்ப்பதற்கும் புதிய விடயங்களை உள்வாங்குவதற்கும் ஒருகாலும் இலக்கணகாரர்கள் தயங்கியது இல்லை என்பதனை "பழயன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே" என்பதனூடு அறிந்துகொள்ளலாம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் மொழியசை



**பேராசிரியர் ந. தெய்வசுந்தரம்** (பணி நிறைவு)
(Professor N.Deivasundaram- Retired)
*தமிழ்மொழித்துறை,*
*சென்னைப் பல்கலைக்கழகம்,*
*சென்னை, தமிழ்நாடு, இந்தியா*

இயற்கைமொழிகளின் அமைப்பில் மொழியசை என்ற இலக்கண அலகு மிக மிக முக்கியமான ஒன்றாகும். மரபிலக்கணங்களில் கூறப்படும் எழுத்துக்கள் அல்லது மொழியியலில் கூறப்படும் ஒலியன்கள் (Phoneme) என்பவற்றிற்கும் அவற்றால் அமைகிற சொற்களுக்கும் இடையில் அமைகிற ஒன்றே மொழியசை (linguistic syllable). இயற்கைமொழிகளின் அமைப்புக்களில் நிலவுகிற வேறுபாடுகளில் முக்கியமான அல்லது முதன்மையான வேறுபாடாக அமைவது மொழியசை அமைப்பே (linguistic syllabic structure) ஆகும்.

## உயிரொலியும் மெய்யொலியும்

ஒலிப்பியல் (articulation) அடிப்படையில் கருதிப்பார்த்தால், எந்தவொரு மொழியிலும் உயிரெழுத்து அல்லது பேச்சொலி என்பது மட்டுமே தனித்துப் பிறக்கக்கூடிய அல்லது இயங்கக்கூடிய ஒன்றாகும். அதற்கு அடிப்படை மூச்சுக்குழாயிலிருந்து வெளிவருகிற காற்று, வாயறையில் எவ்வித தடையும் இல்லாமல் எழுப்புகிற பேச்சொலியே அதுதான் உயிரொலியாகும். ஆனால் மெய்யெழுத்து அல்லது பேச்சொலியானது தனித்து ஒலிக்கப்படக்கூடிய ஒன்று இல்லை. அதற்குக் காரணம், மூச்சுக்குழாயிலிருந்து வெளிவருகிற காற்று, வாயறையில் இதழ், பல், அண்ணம், நாக்கு ஆகிய ஒலியுறுப்புக்களால் தடைசெய்யப்படுவதால் ஒலிக்கப்படுகிற பேச்சொலியே. அதுதான் மெய்யொலியாகும்.

வாயறையில் காற்று தடைசெய்யப்படுவதால் பிறக்கிற மெய்யொலியானது வாய்க்கு வெளியே வெளி வந்துதான் ஒலிக்கப்படவேண்டுமென்றால் வாயறை திறக்கப்படவேண்டும். அவ்வாறு திறக்கும் போது உயிரொலி வெளிவந்துவிடும். எனவேதான் உயிரொலியின் துணையில்லாமல் மெய்யொலி எந்தவொரு மொழியிலும் பிறக்கமுடியாது.

'க்' 'ச்' போன்ற மெய்யொலிகளைத் தனித்து ஒலிக்கவேமுடியாது. ஒன்று, 'இக்' 'இச்' என்று கூறுவோம் அல்லது 'க(க்+அ)' 'ச(ச்+அ)' என்று ஒலிப்போம். அதனாலேதான் பொதுவாக வகுப்புக்களில் ''உடல் இல்லாமல் உயிர் அல்லது ஆவி தனித்து இயங்கும் ஆனால் உயிர் இல்லாமல் உடம்பு தனித்து இயங்காது'' என்ற ஒரு ''குறிப்பிட்ட தத்துவக்கருத்தை'' எடுத்துக்காட்டாகக் கூறுகிறார்கள். இந்த எடுத்துக்காட்டு சரியா இல்லையா என்பதுபற்றி நாம் இங்கு விவாதிக்கவேண்டியதில்லை. அது வேறு பிரச்சினை. ஒரு பொருளுள்ள சொல்லை உருவாக்கும் போது உறுதியாக ஒரு உயிரொலி இருக்கும். ஒரே உயிரொலியைக் கொண்ட சொற்கள் - 'ஆ' 'ஈ' போன்ற தமிழ்ச்சொற்கள் - தமிழில் உண்டு. ஆனால் ஒரு மெய்யொலியானது உயிரைப் போன்று தனித்து அமைகிற சொல்லே, தமிழில் கிடையாது. மாறாக, ஒரு மெய் + ஒரு உயிர் அடிப்படையில் சொற்கள் - 'மா' 'தீ ' 'நீ' போன்ற சொற்கள் - தமிழில் உண்டு.

ஒரு சொல்லில் எத்தனை உயிரொலிகள் வருகிறதோ அத்தனை தடவை வாய் திறக்கும். அந்த உயிரொலிகளுக்கு முன்போ பின்போ அவற்றைச் சார்ந்து, மெய்யொலிகள் வரலாம். உயிர், மெய் - உயிர், உயிர் - மெய், மெய் - உயிர் - மெய் என்ற அமைப்பு சொற்களில் நீடிக்கலாம். ஆங்கிலம் போன்ற மொழிகளில் உயிரொலிக்குமுன்னால் ஒரு மெய் மட்டுமல்லாமல், இரண்டு அல்லது மூன்று மெய்கள்கூட வரலாம். (cold, plot, screw). உயிரொலிக்குப்பின்னால் ஒரு மெய் வரலாம் இரண்டு மெய்களும் வரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழியசை

இவ்வாறு (மெய்) - உயிர் - (மெய்) என்று அமைகிற ஒரு அமைப்புத்தான் 'மொழியசை' (Linguistic Syllable) என்று அழைக்கப்படுகிறது. ஒரு சொல்லில் அமையும் எழுத்துக்கள் அல்லது ஒலியன்கள் 'மொழியசைகளாக' அமைந்து , அதன்பின்னர்தான் பொருள் தரும் சொல் அல்லது உருபு / உருபன் (Morph / Morpheme) அமைகிறது. இங்கு நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது, மொழியசை என்பது தமிழ் யாப்பிலக்கணத்தில் கூறப்படுகின்ற நேரசை, நிரையசை என்பவை அல்ல. அவை யாப்பசைகள் (Prosodic Syllables) எனப்படும். அவற்றின் அடிப்படை வேறு; மொழியசையின் அடிப்படை வேறு.

ஒரு மொழியசையின் 'உச்சி (Peak)' என்பது உயிரொலி. இந்த உயிரொலிக்குமுன் அமைகிற மெய்யொலி "அசைத் தொடக்கம் (Onset)" என்றும் உயிரொலிக்குப்பின்னர் வருகிற மெய்யொலி "அசை முடிவு (Coda)" என்று அழைக்கப்படுகிறது. அசைத்தொடக்கமாக இரண்டு அல்லது மூன்று மெய்களும் சில மொழிகளில் வரலாம். அது போன்று அசை முடிவாக இரண்டு அல்லது மூன்று மெய்களும் சில மொழிகளில் வரலாம். ஆகவே, ஒரு மொழியசை என்பது மெய்/மெய்கள் - உயிர் - மெய்/மெய்கள் ஆகும். இது எல்லா இயற்கைமொழிகளுக்கும் பொருந்தும். (ஆங்கிலத்தில் ஒரு விதிவிலக்கு உண்டு. "button" என்ற சொல்லில் இரண்டாவது மொழியசைக்கு அசை உச்சி என்பது [t] என்பதாகும்.)

தமிழ் மொழியசையில் ஒரு உயிர் மட்டுமே அசை உச்சியாக அமைந்து, சொற்கள் அமையலாம் ('ஈ', 'ஆ') அல்லது தொடக்கமாக ஒரு மெய்யும் உச்சியாக ஒரு உயிரும் அமையலாம் ('மா' 'வா') அல்லது தொடக்கமாக ஒரு மெய்யும் உச்சியாக ஒரு உயிரும் அதையடுத்து அசை முடிவாக ஒரு மெய்யும் அமையலாம் ('கல்' 'மண்'). அதேவேளை அசை உச்சியான உயிருக்கு முன்னால் அசையின் தொடக்கமாக ஒரு மெய்தான் வரமுடியும். ஆனால் உயிருக்குப் பின்னால் இரண்டு மெய்கள் அசை முடிவாக வரலாம். தமிழில் 'வாழ்த்து' என்ற சொல்லைப் பிரித்துப் பார்த்தால், 'வ்ஆழ்த் - த்உ' என்று அமைந்துள்ளதைப் பார்க்கலாம். இங்கு முதலசையில் அசையுச்சியான 'ஆ'-வுக்குப்பின்னால் இரண்டு மெய்கள் ('ழ்த்') அசை முடிவாக அமைகின்றன. இவ்வாறு உயிருக்குப்பின்னால் இரண்டு மெய்கள் வரும் போது, எந்த மெய்கள் அப்படி வரலாம் என்பதற்குத் தமிழில் கட்டுப்பாடு உண்டு. அசையின் முடிவில் முதல் மெய்யாக ய், ர், ழ் என்பவற்றில் ஏதாவது ஒன்று வரலாம். அதையடுத்து ஒரு வல்லினமும் அல்லது ஒரு மெல்லினமும் வரலாம். பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் இதைப் பார்க்கலாம் – வாய்க்கால் (வாய்க்-கால்), வாய்த்தது (வாய்த்-தது), பாய்ந்தது (பாய்ந்-தது) வார்ப்பு (வார்ப்-பு), பார்த்தான் (பார்த்-தான்), மேய்ந்தது (மேய்ந்-தது) வாழ்த்து (வாழ்த்-து), வாழ்ந்து (வாழ்ந்-து), வாழ்க்கை (வாழ்க்-கை). (இதை 'மெய்மயக்கம்' என்று கொண்டால் 'வாழ்த்து' என்பதில் சொல் நடுவில் மூன்று மெய்மயக்கம் அமைகிறது – 'வ்ஆ-ழ்த்த்- உ' 'வ்ஆ-ய்க்க்-ஆல்' 'வ்ஆ-ர்ப்ப்-உ').

## தமிழில் மொழியசை அமைப்பின் முக்கியத்துவம்

தமிழில் ஒன்றுக்குமேற்பட்ட மொழியசைகள் இணைந்து ஒரு சொல்லாக அமையும் போது, சொல்லின் தொடக்கத்தில் மெய் - உயிர் என்ற அமைப்பும் வரலாம் அல்லது தனி உயிர்மட்டும் வரலாம் ('மா (ம்+ஆ)' 'ஈ' ) . அதாவது மெய்யோடு உயிரோ தனி உயிரோ வரலாம். ஆனால் ஒரு சொல்லில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழியசைகள் இணையும் போது, முதல் மொழியசையைத் தவிர, ஏனைய அசைகளில் அசையின் தொடக்கம் அதாவது மெய்யொலி உறுதியாக இருக்கவேண்டும். எந்தவொரு தமிழ்ச்சொல்லிலும் இந்த விதியைப் பார்க்கலாம். அவ்வாறு இல்லையென்றால் அந்த விதிக்காக அந்த அசைகளில் ஒரு மெய்யொலி இணைக்கப்படும்.

எடுத்துக்காட்டாக, 'இலை' என்ற சொல்லோடு 'ஐ' என்ற விகுதி இணையும் போது 'இலைஐ' என்று வரமுடியாது. அவ்வாறு வந்தால், 'இ - ல்ஐ - ஐ' என்று அமைந்துவிடும். அவ்வாறு அமைந்தால், மூன்றாவது மொழியசையில் 'ஐ' என்ற அசை உச்சிக்குமுன்னால் அசைத் தொடக்கமாக ஒரு மெய்யொலி வரவில்லை. இது தமிழ்ச் சொல்லமைப்பு விதிகளுக்கு எதிரானது. எனவே, இங்கு 'ய்' என்ற மெய்யொலி இடையில் தோன்றுகிறது. அப்போது , 'இ-ல்ஐ-ய்ஐ' என்ற மொழியசைகள் ('இலையை') அமைந்துவிடுகின்றன. மூன்றாவது மொழியசைக்கு ஒரு 'அசைத் தொடக்கமாக' ஒரு மெய் தோன்றுகிறது. இதைத்தான் நாம் 'உடம்படுமெய்' என்று அழைக்கிறோம். 'ய்' என்ற மெய்யொலி போன்று, 'வ்' என்ற மெய்யொலியும் 'உடம்படுமெய்யாக' வரும். எங்கு 'ய்' வரும் , எங்கு 'வ்' வரும் என்பதற்குத் தமிழில் தெளிவான விதிகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கண் + ஐ —> கண்ஐ' என்று அமைந்தால் மேலே குறிப்பிட்ட மொழியசை அமைப்பு விதி செயற்படாமல் போய்விடும். 'க்அண்' என்பது முதல் மொழியசை. 'ஐ' என்பது இரண்டாவது மொழியசை. எனவே, இரண்டாவது மொழியசையான 'ஐ' என்ற அசை உச்சிக்குத் தொடக்கமாக 'கண்' என்ற சொல்லின் இறுதி எழுத்தான 'ண்' இரட்டிக்கிறது. அதனால் 'க்அண்-ண்ஐ' ('கண்ணை') என்ற மொழியசை அமைப்பு கிடைக்கிறது.

இதன்மூலம் நாம் ஒன்று பார்க்கலாம். உடம்படுமெய்கள் வருவதற்கும் தனிக்குறிலை அடுத்து மெய் இரட்டிக்கும் என்பதற்கும் ஒரே விதிதான் அடிப்படை. சொல்லில் முதல் மொழியசை தவிரப் பிற அசைகளில் உறுதியாக அசை உச்சியாக மெய் வரவேண்டும் என்பதே அந்த விதி.

சில நாளிதழ்களில் 'இந்தியஅரசு' என்று எழுதுகிறார்கள். இவ்வாறு எழுதுவது எழுத்துத்தமிழ் இலக்கண விதியைப் புறக்கணிப்பதே ஆகும்.

இது போன்று மொழியசையை அடிப்படையாகக்கொண்ட பல செய்திகளைத் தமிழ் இலக்கணத்தில் பார்க்கலாம். அவற்றில் பலரும் விவாதிக்கிற ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன். 'ஒரு உயிர்' என்பது சரியா, 'ஒருயிர்' என்பது சரியா, 'ஓர் உயிர்' என்பது சரியா? தமிழ் இலக்கணத்தில் சொல்லின் தொடக்கத்தில் ஒரு குறில் உயிர் வந்தால் அதையடுத்து 'ர்' என்ற மெய் வரக்கூடாது. 'ஒரு உயிர்' என்பது சரி. ஆனால் இரண்டையும் இணைத்து ஒரு சொல்லாகக்கொண்டால் , 'ஒருயிர்' ஒருவுயிர்' என்று அமையக்கூடாது. அவ்வாறு அமைந்தால் சொல் தொடக்கத்தில் தனிக்குறிலையடுத்து 'ர்' மெய் (அசையின் முடிவாக ) வரக்கூடாது என்ற இலக்கணக் கட்டுப்பாடு மீறப்படுகிறது. எனவே, அதைத் தவிர்க்க 'ஒரு' என்பது 'ஓர்' என்று மாறி, 'ஓருயிர்' என்று ஆகிறது. இவ்வாறு கூட்டுச்சொல்லாக அமையும் போது 'ஒரு' என்பது 'ஓர்' என்று ஆகிறது. இவ்வாறு மாறிய ஒன்றைச் சிலர் மீண்டும் பிரித்து எழுதும் போது, 'ஓர் உயிர்' என்று எழுதுகிறார்கள். அதற்குக் காரணமாகக் கூறப்படுவது, ஒரு உயிரை முதலாகக்கொண்ட சொல்லுக்குமுன்னால் 'ஓர்' தான் வரவேண்டும் 'ஒரு' வரக்கூடாது என்பதே. (இலக்கணங்களில் எண்ணுப் புணர்ச்சியில் இவ்வாறு மாறும் என்று கூறப்பட்டுள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும் - 'ஓரிரண்டு', 'ஓரைந்து'.)

தமிழில் சொல் நடுவில் 'ர்ர்' 'ழ்ழ்' என்ற 'மெய்மயக்கங்கள்' வரா என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆகவே, இயற்கைமொழிகளில் எழுத்து அல்லது ஒலியன்கள் பொருள் உள்ள சொல்லாக உருபனாக அமையும் போது, 'மொழியசை' என்ற ஒரு அமைப்பு இடையில் அமைகிறது. இதன் அமைப்பு, மொழிக்கு மொழிக்கு வேறுபடலாம். ஆனால் மொழியசை என்பது உறுதியாக இருக்கிறது. 'மெய்மயக்கங்கள்' பற்றியும் 'யாப்பசைகள்' பற்றியும் விரிவாகப் பேசுகிற இலக்கணங்கள் இந்த 'மொழியசை' பற்றி நேரடியாக எதுவும் கூறவில்லை என்பது கவனத்தில் கொள்ளவேண்டிய ஒன்று. ■

---

*பக்கம் 13இன் தொடர்ச்சி*

குறை – நான்கு, ஐந்து, ஆறு, ஏழு என்னும் உருபுகளோடு வரும்.

இடம் – ஒன்று, மூன்று, நான்கு, ஏழு என்னும் உருபுகளோடு வரும்.

வினையியலில் அவர் வினைகளை வகுத்துக்கொண்ட முறை தொல்காப்பியம் முதல் வந்த தமிழ் மரபு முறையில் அமைந்தது என்று கூறுவதற்கில்லை.

வினையியலுள் தனிவினை, தொடர்வினை, தன்வினை, பிறவினை, விதிவினை, மறைவினை, செய்வினை, செயப்பாட்டுவினை, தொழிற்பெயர், வினையாலணையும் பெயர், எச்சங்கள், பொதுவினை முதலியவை பற்றிய பல செய்திகள் விரித்துரைக்கப்பெற்றுள்ளன.

இந்நூலுக்கு இலக்கணக் கொத்து, தி. வே. கோபாலையர் பதிப்பு, தஞ்சை சரசுவதி மகால் நூலகம், 1990 பயன்படுத்தப்பெற்றுள்ளது.

நன்றி: (தமிழ் இலக்கண நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம்) ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி



**ஸியாணி தேவரூபன்**, B.Ed (Hons)
(Shiyani Thevaruban)
*மட்டக்களப்பு, இலங்கை.*

"மொழி மாறும் இயல்புடையது. எல்லா மொழிகளும் இடையறாது மாறிக் கொண்டும் வளர்ந்து கொண்டும் உள்ளன என்பதை மொழியியலும் மொழி வரலாறும் உணர்த்துகின்றன. சங்க காலத்திலிருந்து இன்றுவரை தமிழ்மொழியிலும் இந்த மாற்றத்தைக் காண்கின்றோம்" என்று பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் அவர்கள் கூறுவது, கவனிக்கத்தக்க விடயமாகும்.

மாறிக்கொண்டிருப்பதும் வளர்ந்துகொண்டிருப்பதுமான மொழி, இயல்பாக மாறுதல் வேண்டுமே தவிர வலுக்கட்டாயப்படுத்தி மாற்றுதல் கூடாது. இங்கு உதாரணத்துக்கு ஒன்றைப் பார்ப்போம். செயல் + திட்டம் = செயற்றிட்டம். இதுவே புணர்ச்சி விதி. ஆனால் அந்த விதி இன்று கவனத்திற் கொள்ளப்படாமல் செயற்திட்டம் என்று எழுதப்படுவதைப் பல இடங்களில் காண்கின்றோம். இது, மெய்யீற்றின்முன் தகரம் தவிர்ந்த வல்லினம் புணர்வதை ஒத்ததாக உள்ளது. இது விதியை மீறினாலும் இயல்பாக மாறுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது. இந்த மாற்றத்தை எல்லா இடங்களிலும் அங்கீகரிக்கலாமா என்பது ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

இவ்வாறு ஒவ்வொருவரும் தத்தம் நோக்கத்துக்கு ஏற்ப மொழியைப் பார்க்கின்றனர். அந்த வகையில் மொழியை இனத்தின் அடையாளமாகப் பார்த்தல், பண்பாட்டுக்காவியாகப் பார்த்தல், தொடர்பாடல் கருவியாகப் பார்த்தல், சொற்களின் குறியீட்டுத் தொகுதியாகப் பார்த்தல் என அது நீள்கின்றது.

குழந்தை - மொழி, தொடர்பில் சாபிர் அவர்களின் கருத்து, பின்வருமாறு அமைவதைப் பேராசிரியர் இராசாராம் எடுத்துக்காட்டுகின்றார். "மொழி, இயல்பாகவே கைவரப்பெறுகிறது என்னும் பகுத்தறிவுவாதக் கொள்கையை இவர் மறுக்கிறார். பிறக்கும் போதே குழந்தை சமுதாயத்தின் மடியில் பிறக்கிறது. அதற்கு மொழியைக் கற்றுத்தரும் பொறுப்பை அக்குழந்தை வாழும் சமுதாயம் ஏற்றுக்கொள்கிறது. சுற்றுப்புறச் சூழல்களில் வழங்கும் மொழியைக் கேட்டும் பேசியும் கற்றுக்கொள்கின்றது. மொழி, இப்பழக்கங்களின் தொகுப்பு என்பது சாபிரின் கருத்து. பிற்கால மொழியியலறிஞரின் விளக்கத்திற்கு முன்னோடியாக சாபிரின் இக்கருத்து அமைந்துள்ளது."

"ஒவ்வொரு குழந்தையும் ஒரு மொழியைக் கற்கும் திறனோடு பிறக்கிறது. பல மொழிகள் பேசப்படும் இந்த யதார்த்த உலகில் எந்த ஒரு மொழியையும் கற்கும் ஆற்றல் உடையது குழந்தை. இது உண்மையானால், குறைந்த பட்சம் கொஞ்சமாவது எல்லா மொழிகளுக்கும் பொதுவான மொழியமைப்புகள் இயல்பாய் அமைந்திருக்க வேண்டும். சோம்ஸ்கி இதனை ஏற்றுக்கொள்கிறார். நிச்சயமாக எல்லா மொழிகளுக்கும்பொதுவான ஒரு பொதுமை இலக்கணம் (Universal Grammar) இருக்கவேண்டும்; அதுவே தனியொரு மொழியைக் கற்க உதவும் இலக்கண ஆற்றலைக் கட்டமைக்கிறது. இவ்விலக்கண ஆற்றலை 'உள்ளுறை இலக்கணம் (Innate Grammar)' என்று குறிப்பிடுகிறார்."

குழந்தை - மொழி, தொடர்பில் சாபிரினதும் நோம் சோம்ஸ்கியனதும் கருத்து மேற்குறித்தவாறு அமைந்துள்ளது. இந்த இடத்தில் பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்களின்,"மொழி தொடர்பான கருத்து" பின்வருமாறு அமைகின்றது. "சமூகக் கோலங்கள் மொழியின் கோலங்களாகின்றன. சமூகமே மொழியின் தாயகமாகின்றது. சமூக மாற்றமும் வளர்ச்சியும் மொழியிலே தொடர்ச்சியாகச் செல்வாக்குச் செலுத்திய வண்ணமே இருக்கும். ஒலிக் குறியீடுகளினாலும் எழுத்துக் குறியீடுகளினாலும் மொழி ஆக்கம் பெறுகின்றது."

மொழிமீதான ஒவ்வொருவரினதும் கருத்தாக்கம், அவரவர் அறிவு, ஆற்றல், அனுபவம் என்பன வற்றுக்கேற்ற விதத்தில் நிலைகொள்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கணம் கற்பித்தல்



**த. யுவராஜன்**
**(D.Juwarajan)**
*உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) - ஓய்வு, மட்டக்களப்பு, இலங்கை.*

"இயல்பு புணர்ச்சி என்றால் என்ன?" என்று மாணவர்களிடம் கேட்டால், "எதுவித மாற்றமுமின்றி நிலைமொழியும் வருமொழியும் புணர்வது இயல்பு புணர்ச்சி ஆகும்" என்று சொல்வார்கள். ஆனால் 'கடலலை' என்பதை இயல்பு புணர்ச்சி அல்ல என்பார்கள். வாழை + நார் = வாழைநார், மண் + மேடு = மண்மேடு என்றவாறு புணர்வதையே இயல்பு புணர்ச்சி என்கின்றார்கள். கடல் + அலை = கடலலை என்று புணரும் போது 'ல்' உம் 'அ' வும் சேர்ந்து உருவாகும் 'ல' என்பதைத் திரிதலாகக் கொண்டு அதை விகாரப் புணர்ச்சி என்கின்றனர். அது உயிரும் மெய்யும் சேர்ந்து உருவாகும் உயிர்மெய் எழுத்து என்பதையும் அவ்வாறு புணர்வது இயல்பு என்பதையும் உள்வாங்குவதில் தெளிவற்றவர்களாக உள்ளனர். இந்தத் தெளிவின்மையைப் போக்க வேண்டிய பொறுப்பு நம்மைச் சார்ந்திருக்கின்றது.

இந்தத் தெளிவற்ற தன்மையைப் போக்க மாற்றுவழி ஒன்றை முன்வைப்போம். அது என்னவென்றால், விகாரப் புணர்ச்சியை முதலிலே கற்பிப்பதுதான்.

முதலில் மூன்று விகாரங்களுக்கும் ஒவ்வொரு உதாரணத்தைக் கொடுப்போம்.

1. தலை + கவசம் = தலைக்கவசம் (தோன்றல்)
2. ஆள் + பதிவு = ஆட்பதிவு (திரிதல்)
3. மனம் + வேதனை = மனவேதனை (கெடுதல்)

நிலைமொழியும் வருமொழியும் புணரும் போது ஏற்படும் மாற்றமே விகாரம் என்பதைப் புரியவைப்போம். இந்த மூன்று விகாரமும் எவ்வெவ்வாறு ஏற்படுகின்றது என்பதைப் புரியும் விதத்தில் வழிப்படுத்துவோம். பலவீனங்கள் இருப்பின் மேலும் பொருத்தமான பயிற்சிகளைக் கொடுத்து, பலமடையச் செய்வோம்.

இப்போது இயல்பு புணர்ச்சிக்கான உதாரணங்களை வழங்குவோம்.

1. பனை + வேர் = பனைவேர்
2. கடல் + அலை = கடலலை

மேலுள்ள இரண்டு உதாரணங்களையும் அவதானிக்கச் செய்வோம். அவை எவ்வாறு புணர்ந்துள்ளன என்பதை மாணவர்களே சொல்லும் அளவுக்கு நமது கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்துவோம். பின்னர் முன்பு விளக்கிய, மூன்று விகாரங்களையும் ஞாபகப்படுத்தி, மேலுள்ள புணர்ச்சிகளில் தோன்றலோ திரிதலோ கெடுதலோ இடம் பெறவில்லை என்பதையும் அவை வேறு; இவை வேறு என்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டி வழிப்படுத்துவோம்.

நிலைமொழியும் வருமொழியும் புணரும் போது விகாரமின்றிப் புணர்வது **இயல்பு புணர்ச்சி** ஆகும்.

நிலைமொழியும் வருமொழியும் புணரும் போது விகாரப்பட்டுப் புணர்வது **விகாரப் புணர்ச்சி** ஆகும்.

மேற்குறித்தவாறு இயல்பு புணர்ச்சியையும் விகாரப் புணர்ச்சியையும் வரைவிலக்கணப்படுத்தி ஏற்ற உதாரணங்களைத் தருவதற்குரியவர்களாக மாணவர்களை இயங்கப்பண்ணுவோம்.

எடுத்த எடுப்பிலேயே எல்லாவற்றையும் செய்துவிட முடியாது. படிப்படியாகத் திட்டமிட்டு, செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். முதலிலே கொள்வோன் (மாணவன்) நிலையறிதல் வேண்டும். பொருத்தமான கற்பித்தல் அணுகுமுறைகளைப் பிரயோகிக்க வேண்டும். கற்பித்தல் நுட்பங்களை உள்வாங்க வேண்டும். விடய ஞானத்தை இற்றைப் படுத்திக்கொள்ள வேண்டும். புதிய புதிய கோணங்களில் சிந்தித்துக் கற்பித்தலில் ஈடுபட வேண்டும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கண நூல் அறிமுகம்: 2

# இலக்கணக் கொத்து

முனைவர் ச. வே. சுப்பிரமணியன்

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய சேனாவரையர், தம் உரையில் வடபாடைக்கண் தமிழ்பாடை செல்லாமையானும் என்று எழுதுவார். அதாவது தமிழ்மொழியிலிருந்து வடமொழிக்குச் சொற்கள் செல்வதில்லை என்ற கருத்து 13ஆம் நூற்றாண்டில் இருந்தது.

20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பரோ, யமனோ என்ற இரு மேனாட்டினர் திராவிட மொழியின் வேர்ச்சொல் அகராதி (Dravidian Etymological Dictionary) என்ற நூலை எழுதியுள்ளனர். அதில் பரோ என்பவர் திராவிடமொழியிலிருந்து சமஸ்கிருதத்திற்குச் சென்ற சொற்கள் 300ஐக் காட்டி விளக்கங்களும் எழுதியுள்ளார்.

வடமொழியிலிருந்து தமிழ்தான் கடன்வாங்குமே தவிர தமிழ்மொழியிலிருந்து வடமொழி கடன் வாங்காது என்ற உணர்வு தமிழகத்தில் 18ஆம் நூற்றாண்டு வரை இருந்தது. மொழியியலாளர்கள் பல மொழிகளைக் கற்றவர்கள். மொழிகளை ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள். உண்மையை உணர்ந்து திராவிட மொழிகளிலிருந்து சமஸ்கிருதம் கடன் வாங்கியுள்ளதை எழுதியுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் தோன்றிய இரண்டு இலக்கணங்கள் தமிழ்மொழியும் சமஸ்கிருத மொழியும் ஒன்றே, சமஸ்கிருத மொழியிலிருந்துதான் தமிழ்மொழி தோன்றிற்று என்ற நிலையில் பிரயோக விவேகமும் இலக்கணக் கொத்துவும் எழுதப்பெற்றுள்ளன.

இலக்கணக் கொத்துவின் ஆசிரியர் சுவாமிநாத தேசிகர். இவர் திருநெல்வேலியைச் சார்ந்த பெரும்புலவர் தாண்டவமூர்த்தி என்பார் மைந்தராகிய மயிலேறும் பெருமாள் அவர்களிடம் பன்னிரண்டு ஆண்டுகள் தமிழ் கற்றார். செப்பறைப் பதியினராகிய சிவச்செல்வர் கனகசபாபதி என்பவரிடம் வடமொழி கற்றார். திருவாவடுதுறையில் தீட்சை பெற்றுப் பொருள்நூற் பயிற்சியில் சிறந்தார். பின்னர் ஆச்சாரிய நிலை பெற்றுத் திருநெல்வேலி ஈசான மடத்தில் இருந்தார். அதனால் இவர் ஈசான தேசிகர் என்றும் அழைக்கப்பெற்றார். இவர் காலம் 17ஆம் நூற்றாண்டு. மிகுந்த நன்றியுணர்வு உடையவர்.

திருநெல் வேலி யெனும்சிவ புரத்தன்
தாண்டவ மூர்த்தி தந்தசெந் தமிழ்க்கடல்
வாழ்மயி லேறும் பெருமாள் மகிபதி
இருபத கமலம் என்தலை மேற்கொண்டு
இலக்கணக் கொத்துஎனும் நூல் இயம் புவனே

அவருடைய மொழியுணர்வை இப்பாடல் தருகிறது.

தமிழ்நூற் களவிலை அவற்றுள்
ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ
அன்றியும் ஐந்தெழுத் தாலொரு பாடையென்
றறையவே நாணுவர் அறிவு டை யோரே
ஆகையால் யானும் அதுவே அறிக
வடமொழி தமிழ்மொழி எனுமிரு மொழியினும்
இலக்கணம் ஒன்றே என்றே எண்ணுக.

இங்கு ஐந்தெழுத்தால் ஒரு பாடை என்று அறையவே நாணுவர் அறிவுடையோரே என்று எழுதுவது தமிழின் சிறப்பு எழுத்துக்களாக ஐந்தினைக் குறிப்பதாகச் சொல்லலாம்.

தமிழைப்பற்றிய தாழ்ந்த உணர்வோடு முன்னும் பலர் வாழ்ந்ததைச் சுவாமிநாத தேசிகர் வழியில் இன்றும் பலர் வாழ்கின்றனர் என்பதையும் நாம் அறிவோம். இவர் வேற்றுமையியலில் வீரசோழியத்தைப் போன்றே கருத்தா, செயப்படுபொருள், கருவி, கொள்வோன், நீக்கம், குறை, இடம் என்ற நிலைகளில் வகுத்துக்கொள்கிறார்.

கருத்தா — ஒன்று, மூன்று, நான்கு, ஆறு என்னும் உருபுகளோடு வரும்.

செயப்படுபொருள் — எல்லா உருபுகளோடும் வரும்.

கருவி — ஒன்று, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்னும் உருபுகளோடு வரும்.

கொள்வோன் — எல்லா உருபுகளோடும் வரும்.

நீக்கம் — இரண்டு, நான்கு, ஐந்து என்னும் உருபுகளோடு வரும்.

(பக்கம் 10ஐப் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்காப்பியம் - நூன்மரபு
## (பைத்தான்வழி உரை- 3)
## (Python via Tholkaapiyam Nuunmarapu)



**முனைவர் சத்தியராஜ் தங்கச்சாமி**

**(Dr. Saththiyaraj Thangasamy)**

*தமிழ் உதவிப் பேராசிரியர்,*

*ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*

*கோயம்புத்தூர் - 641042, தமிழ்நாடு, இந்தியா.*

முந்தைய இலக்கணம்-காலாண்டுச் சஞ்சிகை பூ 2 இதழ் 2, 3களில் தொல்காப்பியம் அறிமுகம், பைத்தான் அறிமுகம், பைத்தான் நிரல் எழுதும் முறை, தொல்காப்பிய நூற்பாவைப் பைத்தான் நிரலாக மாற்றும் முறைமைகளை அறிந்தோம். அவை தொல்காப்பிய நூன்மரபு என்பதிலுள்ள முதல் ஏழு நூற்பாக்களுக்குப் பைத்தான் நிரலாக்கமுறையில் விளக்கம் தரப்பெற்றதாகவும் பைத்தான் நிரல் உருவாக்கும் வழிமுறைகளை விளக்குவதாகவும் அமைந்தன. அதன் தொடர்ச்சியாகத் தொல்காப்பிய நூற்பா 8க்கு, ஆணைத்தொடர் (Algorithm) உருவாக்கிப் பைத்தான் நிரல் எழுதும் வழிமுறையை இக்கட்டுரை இயம்புகின்றது.

### உயிர் எழுத்தினை நிரலாக எழுதும் முயற்சி

முந்தைய வகுப்பில் கற்ற முக்கியமான குறிப்புகளை மட்டும் இங்கு மீண்டும் நினைவுபடுத்திப் பார்ப்போமா? சரி ஐயா…

input - இது பயனரிடமிருந்து தரவைப் பெறுவதற்குப் பயன்படுகின்றது.

if - ஒன்றை ஆய்வுசெய்யப் பயன்படுகின்றது.

in - பயனர் தரக்கூடிய குறிப்பு, ஏற்கனவே உள்ள பட்டியலில் உள்ளதா எனக் கண்டறிய உதவுகின்றது.

elif - if என்பதில் தரப்பெற்ற குறிப்புத் தவறு என்றால் இன்னொரு மாறியில் உள்ள பட்டியலைச் சரிபார்த்துப் பயனர் தந்த குறிப்புச் சரியானதா என உறுதிப்படுத்த இது பயன்படும்.

else - if, elif ஆய்விற்குப் பின்பு பயனர் தந்த குறிப்புத் தவறு என்றால். இந்தக் குறிச்சொல்மூலம் அதனைத் தெரிவிக்க உதவுகின்றது.

இவற்றை எல்லாம் ஒருமுறை நினைவுப்படுத்திப் பார்த்துக் கொண்டேன் ஐயா. மிக்க மகிழ்ச்சி. அதனை வைத்தே இனிவரும் நூற்பா 8-க்கும் நிரல் எழுதிப் பழகலாம். அந்த நூற்பா வருமாறு:


ஔகார இறுவாய்ப்
பன்னீர் எழுத்தும் உயிர் என மொழிப. (நூற்பா 8)

இந்த நூற்பாவில் சொல்லப்பெற்ற கருத்தியலுக்கு எந்தெந்தத் தன்மைகளில் விளக்கலாமென ஒரு வரைவை உருவாக்க வேண்டும். அதாவது ஒரு குழந்தைக்குக் கற்றுக்கொடுப்பது போல் அதனை எடுத்துச்சொல்ல வேண்டும். அதற்கு நாம் முதலில் ஆணைத்தொடர் (Algorithm) எழுதும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஆணைத்தொடர் என்றால் என்ன ஐயா? கொஞ்சம் விளக்குங்கள். சரி. அதனை முதலில் பார்ப்போம்: இதனை ஆங்கிலத்தில் அல்காரிதம் என்பர். இதற்குப் படிமுமுறை, படிமுறைத் தீர்வு, படிநிலை, செய்நெறி, இடங்காட்டிப் படிமுறை, நெறிமுறைப்பாங்கு, கணிப்பு நெறியெனப் பலமுறைகளில் இணைய அகராதிகள் விளக்கம் தருகின்றன. சுருக்கமாகப் புரிந்துகொள்வது என்றால் நம்மிடம் ஒரு சிக்கல் உள்ளது என்றால் அதனைத் தீர்ப்பதற்குப் பல நிலைகளில் சிந்தித்து அதற்கான தீர்வை அடைவதற்கு ஒரு படிநிலையை வகுத்துக்கொள்வோம் அல்லவா? அதனைத்தான் ஆணைத்தொடர் என்கின்றனர். இதை இப்படிப் புரிந்துகொள்க அன்ப! நீ மாமரத்திற்கு அடியில் நிற்கின்றாய் என்று வைத்துக்கொள்வோம். அந்த மரத்தில் மாங்கனி ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாத தூரத்தில் உள்ளது. அதனைப் பறிக்க வேண்டும். எப்படிப் பறிப்பது? நம்மால் பறிக்க முடியுமா? மரம் பெரியதாக உள்ளதே? இதில் ஏறிப் பறிக்க முடியுமா? எனப் பலவாறு கருதுவாய் அல்லவா! அதுதான் சிக்கல். அந்தச் சிக்கலிற்கு உடனே ஒரு தீர்வினைக் கண்டிருப்பாய் அல்லவா? ஏறித்தான் பறிக்கப் போகின்றாய் என்றால் அடியிலிருந்து அந்தக் கனி தொங்கிக் கொண்டிருக்கும் கிளைவரைக்கும் ஏறவேண்டிய படிநிலைகளை உன் மூளை ஒரு வரைபடமாகப் படிமுறைகளாக வகுத்துத் தந்திருக்கும் அல்லவா? அதே ஒரு குழந்தைக்கு என்ன சொல்வோம். இந்தப் பகுதியிலிருந்து இப்படித்தான் ஏறி அந்தப் பழத்தைப் பறிக்க வேண்டும் என்று சொல்லித் தருவோம் அல்லவா? அப்படிக் கணினிக்கும் கற்றுத்தரும் முறைக்குப் பெயர்தான் ஆணைத்தொடர் என்பதாகும். அதனைப் பின்வரும் வரைபடத்தின்வழி அறிந்துகொள்க.




Algorithm

இப்பொழுது புரிந்துகொண்டாயா? புரிந்த மாதிரியும் புரியாத மாதிரியும் உள்ளது ஐயா. அது பயிற்சி செய்யச்செய்ய தானாகப் புரிய ஆரம்பித்துவிடும். எனவே, அவற்றின் பயன்பாட்டை முதலில் தெரிந்துகொள்வாய் அன்ப! சரி ஐயா.

## ஆணைத்தொடர்களின் பயன்பாடு

ஆணைத்தொடர்கள் பல்வேறு துறைகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இது பல பயன்பாடுகளைக் கொண்டுள்ளன. கணினி அறிவியல் துறைகளில் கணினி நிரலாக்கத்தின் அடிப்படையை இது உருவாக்குகின்றது. மேலும் அவை எளிய வரிசைப்படுத்துதல், தேடுதல் முதல், செய்யறிவு(AI), இயந்திரக் கற்றல்(ML) போன்ற சிக்கலான பணிகள் வரையிலான சிக்கல்களைத் தீர்க்கப் பயன்படுகின்றன. இதுவே கணிதத் துறையில் நேரியல் சமன்பாடுகளின் (Linear Regresion)அமைப்புக்கு ஏற்ற தீர்வைக் கண்டறிதல், வரைபடத்தில் குறுகிய பாதையைக் கண்டறிதல் போன்ற கணிதச் சிக்கல்களைத் தீர்க்கப் பயன்படுத்தப்படுகின்றன. அது மட்டுமின்றிப் போக்குவரத்து, தளவாடங்கள், வள ஒதுக்கீடு போன்ற துறைகளில் மேம்படுத்தவும் முடிவுகளை எடுக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. செய்யறிவுத் துறையிலும் இயந்திரக் கற்றலின் துறையிலும் இது அடித்தளமாகும். மேலும் அவை படத்தை அறிதல், இயற்கை மொழிச் செயலாக்கம், முடிவெடுத்தல் போன்ற பணிகளைச் செய்யக்கூடிய அறிவார்ந்த அமைப்புகளை உருவாக்கப் பயன்படுகின்றன. தரவு அறிவியலில் சந்தைப்படுத்தல், நிதி, சுகாதாரம் போன்ற துறைகளில் உள்ள பெரிய அளவிலான தரவுகளிலிருந்து நுண்ணறிவுகளைப் பகுப்பாய்வு செய்யவும் செயலாக்கவும் பிரித்தெடுக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு பயன்படும். இதனை இலக்கணங்களைக் கணினிப்படுத்தம் செய்யவும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆகையால் நாமும் அவ்வாறே சிந்தித்து இனி நிரல் எழுதிப் பழகுவோமா? சரி, மேற்கண்ட தொல்காப்பிய எழுத்ததிகார நூன்மரபு 8ஆம் நூற்பாவிற்கு ஒரு ஆணைத்தொடர் உருவாக்குவோமா? சரி ஐயா. அதில் கூறப்பட்டுள்ள செய்திகள் என்ன? ஔ எனும் எழுத்துவரை பன்னிரண்டு எழுத்துக்கள் உள்ளன. அவை உயிர் எழுத்துக்கள் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். அப்படி என்றால் பின்வருமாறு படிநிலை ஆணைத் தொடர்கள் எழுதப்படல் வேண்டும்.

படிநிலை 1: தமிழ்மொழியைக் கணினி முறைக்குப் புரியும்வகையில் எழுத வேண்டும் என்றால், முதலில் அதற்குரிய ஓபன் தமிழ் அகராதியை நிறுவ வேண்டும்.

```
!pip install Open - Tamil
```



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிநிலை 2: நிறுவிய பின்பு ஓபன் தமிழ் அகராதியை உள்ளே வருவிக்க வேண்டும்.

import tamil

*இந்த இரண்டு படிநிலைகளும் இனிவரும் நூற்பாக்களுக்கு நிரல் எழுதுவதிற்கும் 'பொது' என்பதால் அடுத்தடுத்த பாடங்களில் ஆணைத்தொடர் உருவாக்கும் பொழுது இடம்பெறாது என்பதை அறிக அன்ப!*

படிநிலை 3: அடுத்து, நூற்பாவில் சொல்லப்பெற்ற உயிர் எழுத்துக்களைப் பட்டியலாக உருவாக்க 'உயிர்_எழுத்து' எனும் மாறியை உருவாக்க வேண்டும்.

உயிர்_எழுத்து = ['அ', 'ஆ', 'இ', 'ஈ', 'உ', 'ஊ', 'எ', 'ஏ', 'ஐ', 'ஒ', 'ஓ', 'ஔ']

படிநிலை 4: அதனை விளைவாகக் காட்டுகின்றதா என எழுதி ஆய்வுசெய்ய வேண்டும்.

print (உயிர்_எழுத்து)

படிநிலை 5: ஏற்கனவே உயிர் எழுத்தின் குறில், நெடில் எழுத்துக்கள்குறித்து அறிந்தமையால் அவற்றையும் பட்டியல்களாகத் தனித்தனி மாறிகளில் 'உயிர்_குற்றெழுத்து', 'உயிர்_நெட்டெழுத்து' என எழுதிக்கொள்ள வேண்டும்.

உயிர்_குற்றெழுத்து = ['அ', 'இ', 'உ', 'எ', 'ஒ']

உயிர்_நெட்டெழுத்து = ['ஆ', 'ஈ', 'ஊ', 'ஏ', 'ஐ', 'ஓ', 'ஔ']

படிநிலை 6: இவற்றை எல்லாம் ஆய்வுசெய்து பார்க்க ஒரு எழுத்தைப் பெறும் input எனும் குறியீட்டுச் சொல் தந்து, 'எழுத்தறிதல்' எனும் மாறியில் எழுத வேண்டும்.

எழுத்தறிதல் = input ("எழுத்தைக் கண்டறிய ஒரு எழுத்தைத் தருக:")

படிநிலை 7: அதன்பிறகு if எனும் கட்டளையில் எழுதி ஆய்வுசெய்ய வேண்டும்.

if எழுத்தறிதல் in உயிர்_குற்றெழுத்து:

படிநிலை 8: எழுத்தறிதல் எனும் மாறியில் வாங்கிய எழுத்து உயிர்_குற்றெழுத்தாக இருந்தால் பின்வருமாறு விளைவினைத் (print) தருவதாக எழுத வேண்டும்.

print ("சரி. இது உயிர்க்குறில் எழுத்தே. பாராட்டு...")

படிநிலை 9: அந்த எழுத்து இல்லை என்றால் அதன்பிறகு elif எனும் கட்டளையில் எழுதி ஆய்வுசெய்ய வேண்டும்.

elif எழுத்தறிதல் in உயிர்_நெட்டெழுத்து:

படிநிலை 10: அந்த எழுத்து இல்லை என்றால் எழுத்தறிதல் எனும் மாறியில் வாங்கிய எழுத்து உயிர்_நெட்டெழுத்தாக இருந்தால் பின்வருமாறு விளைவினைத் தருவதாக எழுத வேண்டும்.

print ("சரி. இது உயிர் நெடில் எழுத்தே. பாராட்டு...")

படிநிலை 11: மேற்கூறிய எழுத்து எதுவுமே இல்லை என்றால் அதன்பிறகு else எனும் கட்டளையில் எழுதி ஆய்வுசெய்ய பின்வருமாறு விளைவினைத் தருவதாக எழுத வேண்டும்.

else:

print ("நீங்கள் எழுதிய எழுத்து உயிர்க்குறிலும் இல்லை. நெடிலும் இல்லை. மீண்டும் முயலவும்...")

இவ்வாறு ஆணைத்தொடர்களின் அடிப்படையில் எழுதிய அந்த நூற்பாவிற்குரிய நிரல் பின்வருமாறு முழுமையாக அமையும்:

```
!pip install Open - Tamil
import tamil
உயிர்_எழுத்து = ['அ', ஆ', 'இ', 'ஈ', 'உ', 'ஊ', 'எ', 'ஏ', 'ஐ', 'ஒ', 'ஓ', 'ஔ']
```



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

```
print (உயிர்_எழுத்து)
உயிர்_குற்றெழுத்து = ['அ', 'இ', 'உ', 'எ', 'ஒ']
உயிர்_நெட்டெழுத்து = ['ஆ', 'ஈ', 'ஊ', 'ஏ', 'ஐ', 'ஓ', 'ஔ']
எழுத்தறிதல் = input("எழுத்தைக் கண்டறிய ஒரு எழுத்தைத் தருக: ")
if எழுத்தறிதல் in உயிர்_குற்றெழுத்து:
 print ("சரி. இது உயிர் குறில் எழுத்தே. பாராட்டு...")
elif எழுத்தறிதல் in உயிர்_நெட்டெழுத்து:
 print ("சரி. இது உயிர் நெடில் எழுத்தே. பாராட்டு...")
else:
 print ("நீங்கள் எழுதிய எழுத்து உயிர்க்குறிலும் இல்லை. நெடிலும் இல்லை. மீண்டும் முயலவும்...")
```

சரி அன்ப! இந்த வகுப்பை இத்துடன் முடித்துக் கொள்வோமா. பிற குறிப்புகளை அடுத்துவரும் பாடவேளையில் அறிந்துகொள்வோமா? சரி ஐயா. மிக்க நன்றி.

இதுவரை விளக்கப்பெற்ற கருத்துக்களின் அடிப்படையில் தொல்காப்பியம் பைத்தான் நிரலாக்கமாக எழுத ஆணைத்தொடர் மிக அடிப்படை என்பதைப் புரிந்துகொள்ளப்பெற்றது. ஆணைத்தொடராக எழுதும்பொழுது நிரல் எழுதுவது என்பது மிக எளிய செயற்பாடு என்பதை அறிந்து கொண்டிருப்போம் அல்லவா. இனி, இதன் தொடர்ச்சியை அடுத்த இதழில் அறிவோம்.

***துணைநின்றவை:***


1. *முனைவர் அ.வினோத், கோ.பூவேந்திரன், முனைவர் சத்தியராஜ் தங்கச்சாமி (2023, அக்டோபர் 15, 16). தொல்காப்பியக் குறுஞ்செயலி உருவாக்கம், தொழில்நுட்ப மாநாடு, குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி, கோயமுத்தூர்.*
2. *தெய்வசுந்தரம் ந., மொழியியலும் கணினிமொழியியலும் (தொகுதி இரண்டு), அமுத நிலையம், சென்னை. (2021)*
3. *சத்தியராஜ் தங்கச்சாமி (2024). தொல்காப்பியம் - நூன்மரபு (பைத்தான்வழி உரை-1) (Tholkaappiyam - Nunmarabu (Python Text-1)), இலக்கணம்-காலாண்டுச் சஞ்சிகை - 6, பூ 2 இதழ் 2, இலங்கை. ISSN: 2961-5712*
4. *சத்தியராஜ் தங்கச்சாமி (2024). தொல்காப்பியம் - நூன்மரபு (பைத்தான்வழி உரை-2) (Tholkaappiyam - Nunmarabu (Python Text-2)), இலக்கணம்-காலாண்டுச் சஞ்சிகை - 7, பூ 2 இதழ் 3, இலங்கை, ISSN: 2961-5712*
5. *தொல்காப்பியம் / எழுத்ததிகாரம் / நூல் மரபு https://ta.wikisource.org/s/238*
6. *பைத்தான் – https://ta.wikipedia.org/s/112*
7. *https://pypi.org/project/Open-Tamil/*
8. *Tholkaappiyar_Nuunmarapu> https://github.com/neyakkoot/Tholkaappiyar_Nuunmarapu*
9. *https://kaniyam.com/category/let-us-learn-learn-python/*
10. *Thangasamy> S., A, V., A, J. P. B., S, S., S, S. S., & Rathinavel, L. (2024). பைத்தான் தானியக்கம்வழி விக்கிமூல மேலடி - கீழடி மேம்பாடு : Python-based Automation for Header-footer Improvement in Wikisource. PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES, 37–46. https://doi.org/10.5281/zenodo.10991314*
11. *Vinoth, A., Thangasamy, S., Nithya, R., Poovandran, G., Mounash, V., Subalalitha, C. N., ... & Jafer, K. S. (2023, December). Automatic Identification of Meimayakkam in Tamil Words Using Rule-Based and Transfer Learning Approaches. In International Conference on Speech and Language Technologies for Low-resource Languages (pp. 443-458). Cham: Springer Nature Switzerland.*


*தொடரும் ...*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூர்ப் பள்ளிகளிலே தொடக்கநிலைகளில் பயன்பாட்டு இலக்கணம் – ஒரு பார்வை

(தொடர் 2)



**முனைவர் சீதாலட்சுமி**
**(Dr. Seetha Lakshmi)**
*இணைப் பேராசிரியர்,*
*தேசிய கல்விக் கழகம், சிங்கப்பூர்.*

தொடர்ந்து ஆகிய, முதலிய என்னும் சொற்களையும் அவற்றின் பயன்பாடுகளையும் விளக்கமாகத் தொடக்கநிலை ஐந்தில் படிப்பார்கள். எழுத்தறிவில் எழுத்துகளும் எழுதுதலும் எண்களும் மிகவும் இன்றியமையாதவை. அவ்வகையில், எண்ணுப் பெயர்கள் என்ற தலைப்பில், 1 முதல் 100வரை தொடக்கநிலை மூன்றிலும் நான்கிலும் படிப்பார்கள். பிறகு மீள்நோக்கலாகப் படிப்பார்கள். அடுத்து, நிரல் அல்லது வரிசையை உணர்த்தும் சொற்களான முதலில், அடுத்து, பிறகு ஆகியவற்றைத் தொடக்கநிலை மூன்றில் படித்து அறிவார்கள். மேலும் முன், பின் போன்ற சொற்கள் அவர்களுக்குத் தொடக்கநிலை நான்கில் கற்றுத்தரப்படும். தொடர்ந்து உறவுமுறைப் பெயர்கள் மொழி மரபுகள் என்ற தலைப்பின்கீழ் மீள்நோக்கலாக இடம்பெறும். தொடர்ந்து சொற்பயன்பாடு என்ற தலைப்பில் ஒலி வேறுபாட்டுச் சொற்கள், ஒரு பொருள் பல சொல், ஒரு சொல் பல பொருள், ஒரு, ஓர், இரட்டைக்கிளவி, சில, சிலர், பல, பலர் ஆகியன கற்றுத்தரப்படும். ஆகிய, முதலிய எனும் கூறுகள் தொடக்கநிலை ஐந்தில் கற்றுத்தரப்படும். அதற்குப் பிறகு மீள்நோக்கலாக இடம்பெறும். எண்ணுப்பெயர்கள் ஒன்று முதல் நூறு வரை படிப்பது தொடக்கநிலை மூன்று, நான்கிலும் இடம்பெறும். ஆண்பால், பெண்பால், இளமைப்பெயர்கள். உயிரினங்களின் ஒலிகள், தொழிலாளர் பெயர்கள், எதிர்ச்சொற்கள், திசைப்பெயர்கள், வடிவங்கள், பொழுதுகள், இணைமொழிகள் ஆகியவற்றை மாணவர்கள் தொடக்கநிலை 1 முதல் 2 ஆண்டுகளில் இடம்பெற்ற வகுப்புகளில் சில கூறுகள் பயன்பாட்டு இலக்கணமாக அறிமுகம் செய்யப்படுவதுடன் சில கூறுகள் தொடக்கநிலை இரண்டில் மட்டும் படிக்கும் வகையில் இடம் பெற்றுள்ளன. இவை மாணவர்களுக்கு நல்ல மொழி அடித்தளத்தையும் பயன்பாட்டில் பயன்படுத்தும் தன்னம்பிக்கையையும் தரும் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது தொடக்கநிலை மூன்று பி பயிற்சிநூலில் (கல்வி அமைச்சு) பக்கம் 53இல் உள்ள ஒரு தொழில்பெயர் சார்ந்த பயிற்சியைப் பார்ப்போம். அதில் வினாவை முதலில் படித்துவிட்டு மாணவர்கள் அருகில் உள்ள குறுக்கெழுத்துக்கட்டப் புதிரைப் பார்த்து முதலில் பல தொழில்களைச் செய்பவர்களைப்பற்றி அறியலாம். அதற்கு அடுத்துச் சரியான விடையை அங்கே உள்ள படத்தினைப் பார்த்து எழுதலாம். இங்கு ஆசிரியரும் முதலில் அந்தக் குறுக்கெழுத்துக்கட்டத்தில் உள்ள பெயர்களை, மாணவர்களைக் கேட்டு அவற்றைப்பற்றி உரையாடிய பிறகு பின் விடைகளை எழுதச் சொல்லலாம். மாணவர்களின் திறன் தேர்ச்சிக்கு ஏற்ப இந்தப் பாடத்தை அவர் நடத்தலாம். இங்கு தரப்பட்ட தொழில்கள் தவிரப் பிற தொழில்கள்பற்றியும் மாணவர்களிடம் கேட்டுக் கூடுதல் விளக்கம் தரலாம்.

பக்கம் 54இலும் நான்கு தொழில்களுக்கான படங்கள் தரப்பட்டுள்ளன. ஆக மாணவர்கள், தோட்டக்காரர், சமையற்காரர், தையற்காரர், நிருபர், தச்சர், காவலர் ஆகிய விடைகளை எழுத வாய்ப்பாக முன்னால் அமைந்துள்ள குறுக்கெழுத்துக்கட்டப்புதிர் அமைந்துள்ளது. ஏறக்குறைய 12 தொழிலாளர்களைப்பற்றிய செய்திகளுக்குப் பிறகு ஆறு விடைகளை எழுதுவது எளிது. அதே நேரம் ஆசிரியர், முன்னால் உள்ள 12 தொழில்களையும் எடுத்துக்கூறி விளக்காவிட்டால் அல்லது பாடத்தில் முன்பே உரிய படங்களுடன் விளக்கங்களுடன் எடுத்துக்கூறாவிட்டால் மாணவர்களால் அதிலும் குறிப்பாகத் தமிழை அதிகம் பயன்படுத்தாத பின்னணியிலிருந்து வரும் மாணவர்களுக்கு வினாக்களுக்கான விடைகளை எழுதுவது கடினம். தவிர இங்கு குழு நடவடிக்கை மூலம் மாணவர்கள் தங்களுக்குள் கலந்துரையாடி விடைகளைக் கண்டுபிடித்த பிறகு ஆசிரியர் குறுக்கெழுத்துப்புதிருக்கான விடைகளைக் கலந்துரையாடும் போது குழுவில் இடம்பெற்ற மாணவர்களில் தமிழை நன்கு புழங்கும் பின்னணியிலிருந்து வந்த மாணவர்களும் தமிழை வீட்டில் கேட்டு ஆனால் தமிழைப் பேசாது பள்ளி வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களும் தமிழைப் பேசாத பின்னணியைச் சேர்ந்த மாணவர்களும் ஒருவரை ஒருவர் ஆக்கபூர்வமாக சார்ந்திருந்து கலந்துரையாடிய விடைகள் வகுப்பில் சிறப்பான ஒரு பதிலைத்தர அவர்களை ஊக்குவிக்கும். எனவே இங்கே முன்தயாரிப்பு என்பது ஆசிரியர் சார்பிலும் மாணவர் சார்பிலும் இருப்பது சிறந்த பாட விளக்கத்துக்கும் பாடத்தை நீண்ட காலத்துக்குப் புரிந்து செயற்படுவதற்கும் உதவியாக இருக்கும். எனவே இங்கே ஆசிரியவியல் அல்லது கற்பித்தல் என்பது மிகவும் அவசியமானதாகும்.

தொழிலாளர் பெயர்கள் தொடக்கநிலை இரண்டிலும், தொடக்கநிலை 3,4 எனும் இரண்டாண்டுக் காலத்திலும் கற்றுத்தரப்படுவதைப் பின்னிணைப்புப் பட்டியல் எடுத்துக்கூறுகிறது. தொடக்கநிலை 5, 6இல் மீள்நோக்கலாக இவை கற்றுத்தரப்படுகின்றன.

அதே நூலில், பக்கம் 50இல் நாங்கள் என்ற சொல்லைப் பயன்படுத்தி அதற்கேற்பப் பயனிலை அமைவதை இங்கு வினாக்கள் எடுத்துக்காட்டுகின்றன. எல்லா இடங்களிலும் எழுவாயும் பயனிலையும் தரப்பட்டுள்ளன. மாணவர்கள் இடையில் உள்ள சொற்களைப் பயன்படுத்தி அதாவது அச்சொற்களும் இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை உருபுகளைக் கொண்டும் வினையடையைக் கொண்டும் அமைந்திருப்பதை அறிய முடிகிறது. ஆக , ஒரு பயிற்சியில் வேற்றுமை உருபுகள், ஒரு வினையடை, மூன்று இடங்களில் பயன்படுத்தப்பட்ட 'நாங்கள்' என்ற எழுவாய், அதற்குப்பொருத்தமான ஒரே பயனிலை ஆகியவற்றைத் தந்துள்ளனர். இது மீண்டும் நினைவில்கொள்ளும்வகையில் அமைந்துள்ளது. இதனை இன்னும் மேம்படுத்தும் வகையில் வேற்றுமை உருபுகளை மட்டும் பயன்படுத்தி விடைகளை எழுதும் நோக்கில் நாங்கள் என்ற பலர்பால் சார்ந்த எழுவாயை அமைத்தும் வினாக்களை அமைக்கலாம். எனினும் ஒரே மாதிரியான பயனிலை வரும் என்பதை உறுதிப்படுத்துவதில் சிரமம் இருக்கலாம். ஆனால் நாங்கள் என்ற எழுவாய்க்குப் பொருத்தமான வேறு பயனிலைகளையும் இணைத்துக்காட்டினால் மாணவர்களுக்குக் கற்றல் என்பது இன்னும் எளிதாக அமையும். இது சற்றுப் பின்தங்கிய மாணவர்கள் அவர்களது நீண்டகால நினைவுப்பெட்டகத்தில் இருத்திப் பயன்படுத்தப் பெருந்துணையாக இருக்கும்.

மூன்றாம் வகுப்பு நூலில் பயிற்சி 9.5இல் (தொடக்கநிலை 3 பி, பக்கம் 48), ஆண்பால் சொல்லுக்குப் பெண்பால் சொல்லையும் பெண்பால் சொல்லுக்கு ஆண்பால் சொல்லையும் கண்டுபிடித்துச் சரியான கட்டத்தில் எழுது என்ற வினாக்குறிப்புடன் ஐந்து சிறிய கூடைகளில், அத்தை, புதல்வன், கிழவி, தோழன், அரசன் ஆகிய ஐந்து சொற்களைக் கொடுத்துள்ளனர். கீழே, ஓர் அட்டவணையில், ஆண்பால் பெண்பால் என்ற இரண்டு கூறுகளைத் தந்து, அவற்றில் சிலவற்றுக்கு விடை எழுத இடங்களையும் சிலவற்றுக்கு விடைகளையும் தந்துள்ளனர். இங்கு, தரப்பட்ட உதவிச் சொற்களைத் தேர்ந்தெடுத்து விடைகளை எழுத மாணவர்களுக்கு வாய்ப்புகள் உள்ளன.

அந்தப் பகுதி இங்கே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது (தொடக்கநிலை 3பி பக்கம் 48).

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| ................ | அரசி |
| மாமா | ................ |
| .............. | புதல்வி |
| கிழவன் | ................ |
| ................ | தோழி |

(கல்வி அமைச்சு, 2017)

இங்கு இது பொருத்தமான பகுதியாக இருப்பினும் கிழவன், கிழவி என்பது பாடத்தை நடத்துமிடத்தில் இடம்பெற்றிருக்கலாம் எனக் கூறத் தோன்றுகிறது. கிழவன் என்பது மூத்த குடிமக்களைக் குறிப்பதாக இன்றைய நிலையில் இருப்பதால் அவன், இவன் என்ற வகையில் கிழவன் என்று கூற இயலுமா என்பதைப் பாடத்தில் விளக்குவது நல்லது. மேலும் கிழவி என்பதை நாம் வேறுவகையில் இன்றைய தமிழ் மரபை விட்டு மரியாதைக்குறைவாகவும் ஒருமையில் சொல்லும் சொல்லாக மாற்ற இயலாது என்பதால் தாத்தா, பாட்டி என்று கூறலாமா என்று சிந்திப்பது புதிய பல சிந்தனைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவகுக்கும் என்பது இங்கே குறிப்பிடக்கூடிய ஒன்று. அடுத்து அதே நூலில் பக்கம் 49இல் பயிற்சி 9.6இல் அஃறிணையில் பலவின்பால் சார்ந்த பயனிலைகள், ஏழாம் வேற்றுமை உருபான கண் என்பதன் இன்றைய பயன்பாட்டு உருபான இல் என்பதைக் கொண்ட சொற்களும் பன்மை என்பதை எடுத்துக்கூறும் வகையிலான சொற்களும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு தரப்பட்டுள்ள படம் கட்டுரை எழுதுவதற்கும் வழிவகுக்கும் வகையில் ஓர் இந்தியர் பலகாரக்கடையை (Uma STORE) மறு உருவாக்கம் செய்திருப்பது போல் காட்டப்பட்டுள்ளது. அங்கே ஆடவர்கள் இருவர் பொருள்களை விற்க, மகளிர் இருவர் பொருள்களை வாங்குவது போல் படம் வரையப்பட்டுள்ளது. எனவே இரண்டு செயற்பாடுகளுக்காக இந்தப் படம் உதவுகிறது எனலாம். பகுதியில், 'படத்தைப் பார்', 'வாக்கியங்களைப் படி' என்ற குறிப்புடன் கட்டுரை எழுதுவதற்கான முன் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

பலகாரங்கள், இனிப்பு, பலவகையான என்ற மூன்றும் துணைச்சொற்களாகத் தரப்பட்டுள்ளன.

1. கடையில் பலகாரங்கள் இருந்தன
2. கடையில் இனிப்புப் பலகாரங்கள் இருந்தன
3. கடையில் பலவகையான இனிப்புப் பலகாரங்கள் இருந்தன

என்று ஒரு வாக்கியத்தை விரிவாக்கி எழுதும் வழியைக்காட்டுவது போல் செய்திகள் இருந்தன.

இவை யாவும் 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற வகையில் இங்கே தரப்பட்டுள்ளன. இதன் அடுத்த நிலையில் இந்தப் பாடநூல் வரிசையில் பின்னிணைப்பில் தரப்பட்ட ஒவ்வோர் இலக்கணக்கூறுக்கும் எவ்வாறு பாடநூலில் விளக்கங்களும் ஆசிரியர் கையேட்டில் வழிகாட்டிக் குறிப்புகளும் பயிற்சி நூலில் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன என்று ஒப்பிட்டுப்பார்க்கும் போது கூடுதல் விவரங்களைப் பெற இயலும்.

பாடத்திட்டம் என்பது பாடங்களைத் திட்டமிட்டுத் தருவது மட்டுமல்ல. அது கூறும் செய்திகள் தொடக்கநிலை எனில் தொடக்கநிலை முதல் , ஒன்று தொடக்கம் ஆறு ஆண்டுகளில் மாணவர்களுக்குக் கற்பித்தாக வேண்டும். அதே போல் உயர்நிலை எனில் உயர்நிலை ஒன்று முதல் ஐந்து வகுப்புகளுக்குள் கூறப்பட்ட அல்லது திட்டமிடப்பட்ட பாடக்கருத்துகளை மாணவர்களுக்குக் கற்பிக்கும் வகையிலும் மாணவர்கள் அவற்றைப் பயிற்சிசெய்து மதிப்பீட்டுக்குத் தயாராகும் வகையிலும் மதிப்பீட்டில் அவர்கள் வெற்றிபெற்று அடுத்த நிலைக்குச் செல்லும் வகையிலும் குறிப்பிடத்தக்க கூறுகளை வாழ்வு முழுதும் பயன்படுத்தும் வகையிலும் பாடக்கருவிகளில் அவற்றுக்கான இடங்கள் முறையாக இடம்பெற வேண்டும். இது பாடங்கள், பயிற்சிகள், வீட்டுப்பாடங்கள், சிறு தேர்வுகள், முறைசார்ந்த , முறைசாரா மதிப்பீடுகள் ஆகியவற்றின் வழியே உயிரூட்டப்படும் போது பாடத்திட்டத்தின் உள்ளடக்கங்களைக் கற்புடன் பின்பற்றும் வழிவகை வெற்றிபெற்றதாகக் கருதப்படும். அவ்வகையில் பயிற்சி 7.1 பக்கம் 13இல் உம் என்னும் 'இணைப்புச்சொல்லைக் கொண்டு வாக்கியங்களை இணை' என்ற கருத்தில் பயிற்சி ஒன்று ஓர் எடுத்துக்காட்டுடன் தரப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக,

1. கரடி மீன் சாப்பிடும். 2. கரடி தேன் சாப்பிடும்.

என்று இரண்டு வாக்கியங்கள் தரப்பட்டு, "கரடி மீனும் தேனும் சாப்பிடும்" என்று கூறப்பட்டுள்ளது. பிறகு,

1. கவின் ரப்பர் வாங்கினான். 2. கவின் பென்சில் வாங்கினான்.

என்று இரண்டாம் வினாவும்

1. அல்லி மோதிரம் அணிந்தாள். 2. அல்லி வளையல் அணிந்தாள்.

என்று மூன்றாம் வினாவும்

1. ராணி கிளி வளர்த்தாள். 2. ராணி முயல் வளர்த்தாள்"

என்று நான்காம் வினாவும் இடம்பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவல் வினைமுற்று என்பதைப்பற்றித் தெரிந்துகொள்வோம் என்ற தலைப்பில் பக்கம் 43(தொடக்கநிலை 6பி)இல் பாடம் இடம்பெற்றுள்ளது. இதில் ஏவல் வினைமுற்று

| உடன்பாட்டு ஏவல் வினைமுற்று | எதிர்மறை ஏவல் வினைமுற்று |
|---|---|
| கொடு | கொடுக்காதே |
| எழுது | எழுதாதே |
| எடு | எடுக்காதே |
| தூக்கு | தூக்காதே |
| போடு | போடாதே |
| கேள் | கேட்காதே |

உடன்பாடான கட்டளைப் பொருளில் அமைந்திருப்பது உடன்பாட்டு ஏவல் வினைமுற்றாகும். எதிர்மறையான கட்டளைப் பொருளில் அமைந்திருப்பது எதிர்மறை ஏவல் வினைமுற்றாகும். (தொடக்கநிலை 6பி, ப.43இல் உள்ள கூறுகள்)

இங்கே, வண்ணத்தில் மட்டும் வகைப்பாடுகளை இணைக்காமல் அவ்வாறே தரப்பட்டுள்ளன. அடுத்த பக்கத்தில் (தொடக்கநிலை 6பி), (கல்வி அமைச்சு, 2020, ப. 44) உடன்பாட்டு ஏவல் வினைமுற்று வாக்கியங்கள், எதிர்மறை ஏவல் வினைமுற்று வாக்கியங்கள் என்ற தலைப்பில் எடுத்துக்காட்டு வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன.

அவை முறையே பேசு, சாப்பிடு, தேடு, செய், வாங்கு என்று உடன்பாட்டு ஏவல் வினைமுற்று வாக்கியங்களுக்கும் பேசாதே!, சாப்பிடாதே!, தேடாதே!, செய்யாதே!, ஓடாதே! என்று எதிர்மறை ஏவல் வினைமுற்று வாக்கியங்களுக்கும் எடுத்துக்காட்டாக அமையும் சொற்களைக் கொண்டு அமைந்துள்ளன. இவற்றுக்கான வாக்கியங்கள் அனைத்தும் இரண்டு வாக்கியங்களைக் கொண்டு அமைந்துள்ளன.

பக்கம் எட்டில் 'தெரிந்துகொள்வோம்' என்ற தலைப்பில், மெய்யீற்றுப் புணர்ச்சி குறித்த விளக்கங்கள் உரிய எடுத்துக்காட்டுகளுடன் மாணவர்களுக்குப் புரியும்வகையில் தரப்பட்டுள்ளன. மாணவர்கள் தொடக்கப்பள்ளி நிலையில் தமிழ்மொழியில் சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் உரையாடத் தேவையான அடிப்படை இலக்கணக்கூறுகளையும் மொழிமரபுகளையும் கற்க வழிகள் தொடர்ந்து செயற்பாட்டில் இருப்பதை அறிய முடிகிறது.

## பயன்பாட்டு இலக்கணமும் தமிழ்மொழி கற்பித்தலும் - சில எதிரொளிப்புகள்

இரண்டாம் மொழிச்சூழலில் மாணவர்கள் பயன்பாட்டு இலக்கணத்தைக் கற்பதில் உள்ளடக்கப் பாடமும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. அவ்வகையில் வாசிப்புப் பாடத்தில் இடம்பெறும் மொழிக்கூறுகளைப் பயன்படுத்தி அல்லது அவற்றைப்பற்றிப் பேசிவிட்டுப் பின்னர் பயன்பாட்டு இலக்கணத்தை எடுத்துக்கூறிக் கற்பிப்பது பயன்மிக்கது. இது சிங்கப்பூர் மாணவர்கள் அதாவது தமிழல்லாத பிறமொழிப் பின்புலத்துடன் வரும் மாணவர்கள் அதிகம் அவதிப்படுவது இலக்கணப்பகுதிக்குத்தான். ஏனெனில் தொடக்கநிலை ஐந்தில் இடம்பெறும் கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்க என்று வரும் வினாவில் பெயரைத் தந்து அதற்குப் பக்கத்தில் கோட்டைப் போட்டு அதன் முடிவில் அடைப்புக்குறிக்குள் வேற்றுமை உருபு இருக்கும் போது தமிழைப் புழங்கக்கூடிய மாணவர்கள் அதற்கான விடையைக் கட்டாயம் சரியாக எழுதுவர். இதுதான் மொழியைக் கைவரப்பெற்றதன் வியத்தகு பயன் எனில் மிகையில்லை. அவ்வாறு கைவரப்பெறாதவர்களுக்கு இலக்கணம் என்பது எட்டிக்காயாக அமையக்கூடும். அவர்களுக்கு இலக்கணத்தைப் புரியவைத்துக் கற்பித்து முடிவில் அதுவும் மொழியும் கைவரப்பெற ஒரே வழி, பாடத்தின் உள்ளடக்கத்துடன் அதை இணைத்துக் கற்பித்து விளக்கிச்சொல்வதுதான். தொடர்ந்து குழு நடவடிக்கை வாயிலாக மாணவர்கள் புரிந்துகொள்ள உதவுவது, பெரிதும் வசதியானது. தமிழைப் பேசிப்புழங்காத வீட்டுச் சிறுவர்கள் தமிழ் வகுப்பில் எதிர்நோக்கும் சவால்களையும் அவர்களது மனநிலையையும் புரிந்து ஆசிரியர்கள் தரும் வசதி செய்தலும் வழிகாட்டுதலும்பற்றி இங்கே மீண்டும் மீண்டும் எடுத்துக்கூறுவது மிகவும் உதவியான செய்தியாகும். இது இங்கு மட்டுமல்ல அயல்நாடுகளில் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகப் படிக்கும் புதிய குடியேறிகளின் குழந்தைகளும் இவ்வாறே மன உளைச்சலுக்கு உள்ளாவர். அவர்களுக்கு உதவுவதற்கு அக்கும் உள்ளடக்கத்தின் வழியே இலக்கணம் பயன்பாட்டு இலக்கணமாக கற்பிக்கப்படுவது இடம்பெறுகிறது(Schleppegrell, Mary.J,2016).

*தொடரும் ...*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்காப்பியத்தில் மெய்ப்பாடு



**பேராசிரியர் பெ.சுயம்பு**
**(Professor P.Suyambu)**
*காப்பாட்சியர்,*
*உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்*
*சென்னை, தமிழ்நாடு, இந்தியா.*

தொல்காப்பியம் தமிழ் இலக்கியக் கட்டமைப்பிற்கு முன்னுரிமை தந்து இலக்கணம் கூறுகிறது. இதை அதன் சிறப்புப் பாயிரம், செய்யுளியலின் முதல், இறுதி நூற்பாக்கள், செய்யுள் வழக்கிற்கான சிறப்பு விதிகள் ஆகியன உணர்த்துகின்றன.

*தமிழ்கூறு நல்லுலகத்து*
*வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்*
*எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி*
*செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு*
................................................ (சிறப்புப் பாயிரம்)

*மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ*
................................................................................
*திணையே கைக்கோள் கூற்றுவகை எனாஅ*
*கேட்போர் களனே காலவகை எனாஅ*
*பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ*
................................................................................
*ஆறு தலையிட்ட அந்நா லைந்தும்*
*அம்மை அழகு தொன்மை தோலே*
*விருந்தே இயைபே புலனே இழைபெனாஅப்*
*பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ*
*நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென*
*வல்லிதின் கூறி வகுத்துரைத் தனரே.*
(செய்யுளியல் 1)

*செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி*
*இழைத்த இலக்கணம் பிழைத்தன போல*
*வருவ உளதெனினும் வந்தவற் றியலான்*
*திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே.*
(செய்யுளியல் 234)

தொல்காப்பிய இலக்கண விதிகளுக்குத் தரவுகளாக ஏற்கப்பெற்றவை கற்றோர் பயன்படுத்திய சிதைவிலா இயற்சொல் முதலான நால்வகைச் சொற்களாலான மொழி வழக்கும் யாப்பின் கட்டமைப்பு விதிகளுக்கு முன்னுரிமை கொடுத்துச் சிறிய சிதைவுடனான செய்யுள் வழக்கும் ஆகும்.

*வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே*
*நிகழ்ச்சி அவர்கட் டாக லான*
(மரபியல் 149)

*உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு படுதலின்*
*வழக்குவழிப் படுத்தல் செய்யுட்குக் கடனே*
(மரபியல் 150)

கற்றோர் மொழி வழக்குப் பலவாகி வழக்கிலுள்ள வட்டார, சமூகக் கிளைமொழிகளைப் பேசுகிற மாந்தர் யாவராலும் புரிந்துகொள்ளுதலுக்கான செம்மைப்படுத்தப் பெற்ற (standard) பொதுவழக்காகையால் (Commondialect) தொல்காப்பியம் உள்ளிட்ட தமிழ் இலக்கண நூல்கள் இவ்வழக்கினை இலக்கியத்திற்கு உரிமைப்படுத்துகின்றன.

தொல்காப்பியம் விவரிக்கின்ற செய்யுள் எனப்படுகிற இலக்கியத்தின் முப்பத்து நான்கு உறுப்புக்களும் ஓர் இலக்கியத்தை மிகச் சிறந்த தகுதி உடையதாகக் கட்டமைக்கிற குறைவிலா நிறைவுடையன ஆகும். ஓர் இலக்கியம் மிகச் சிறப்பானது எனும் தகுதியினை, அவ்விலக்கியம் சுவைப்போரால் முழுமையாகப் பொருளுணர்ந்து, இலக்கியத்தின் உணர்ச்சியுடன் ஒன்றிச் சுவைத்திடும் போதே அடைகிறது. உரிப்பொருள் எனப்படுகிற கருத்து, அதனோடு தொடர்புடைய மாந்தர் அல்லது பிற உயிரினங்களாகிய கருப்பொருள், உரிப்பொருள் சிறப்பாக உணரப்படுவதற்கான சூழலை அமைத்திடும் இடம், காலம்; உணர்ச்சியைக் கட்டமைத்துப் புலப்படுத்தவல்ல ஓசை வேறுபாட்டுடனான சொற்கள், உரிப்பொருளைச் சிறப்பாகப் புலப்படுத்தவல்ல உவமை, உள்ளுறை, இறைச்சி போன்ற விவரிப்பு உத்திகள், இலக்கிய வகைமை போல்வன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தின் சிறப்பான தகுதிக்குத் துணைபுரிவன ஆகும். தொல்காப்பியச் செய்யுளியலின் முதல் நூற்பா இத்தகுதிகளைச் செய்யுள் உறுப்புக்கள் எனத் தொகுத்துச் சுட்டுகிறது.

தொல்காப்பியக் கொள்கையின்படி இலக்கியம் எனப்படுவது, 'புனைந்துரை' ஆகும். சிறப்பாக, அக இலக்கியம் எனப்படுவது, 'நாடக அமைப்புடைய புனைந்துரை'. இப்புனைந்துரை மாந்தரின் இயல்புகள், பண்பாட்டு இயல்புகளோடு பின்னப்பெற்று, சுவைப்போரிடம் நடப்பியல் சார்ந்த உயிர்ப்பினைத் தருகிறது.

## மெய்ப்பாட்டியல்

தொல்காப்பியம், பொருளதிகாரத்தில் ஆறாம் இயலாக மெய்ப்பாட்டியலை அமைத்துள்ளது. இந்த இயல் செய்யுளின் உணர்ச்சி சார்ந்து மெய்ப்பாடுகளை விவரிக்கிறது. இங்கு அக இலக்கியங்களுக்கும் புற இலக்கியங்களுக்கும் பொதுவானவும் பேரளவில் பயின்று வருவனவுமான நகை முதலான எட்டு மெய்ப்பாடுகள் தொடக்கத்தில் விவரிக்கப்படுகின்றன. தொடர்ந்து அன்பின் ஐந்திணை எனப்படும் அறவழிப்பட்ட காதல் ஒழுக்கங்கள், அவற்றிற்கு மாறான கைக்கிளை, பெருந்திணை தொடர்பான மெய்ப்பாடுகள் விவரிக்கப்படுகின்றன.

மெய்ப்பாடு எனப்படுவது, உள்ளத்தில் (அகத்தில்) தோன்றும் உணர்வினை உடம்பு (மெய்) புறத்தே வெளிப்படுத்தும் குறிப்புமொழி ஆகும். குறிப்புமொழி எனப்படுவது, பேச்சு அல்லாத உறுப்புக்களின் அசைவு அல்லது செயல் ஆகும். இதனைத் தமிழ்மொழி அறிஞர்களான இளம்பூரணர், பேராசிரியர் போன்றோர் 'இவற்றைச் சுவையெனவும் குறிப்பெனவும் வழங்கினும் அமையும்' என்பர். வடமொழி அறிஞர்கள் ரஸ (ரசம்) என்று கூறுவர். மெய்ப்பாடானது, மேலைநாட்டாரின் உடல்மொழிக்கு (body language) இணையானது.

*உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளான்*
*மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்*

(செய்யுளியல் 196)

*எண்வகை இயல்நெறி பிழையா தாகி*
*முன்னுறக் கிளந்த முடிபின ததுவே*

(செய்யுளியல் 197)

பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப

(செய்யுளியல் 1)

*நாலிரண் டாகும் பாலுமா ருண்டே*

(செய்யுளியல் 2)

*கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணரும்*
*உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்*
*நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே*

(மெய்ப்பாட்டியல் 27)

மெய்ப்பாடு விளையாட்டு, நாடகம் போன்ற கேளிக்கைகளின் போது தோன்றும்; கண்களாலும் செவிகளாலும் நுட்பமாக உணரப்படும். இவ்விரு புலன்களையும் ஆற்றலுடன் உடைய மாந்தர்க்கே இதனைச் சிறப்பாக உணரந்துகொள்ள இயலும்.

உள்ளுறை உவமம், இறைச்சி போன்றவற்றைச் சூழல் சார்ந்து அறிவினால் உய்த்துணர்தலைப் போல்வது அன்றி, உடம்பில் காணப்படுவதும் கேட்கப்படுவதுமான குறிப்புமொழிகளால் வெளிப்பட அறிந்துகொள்ளத் தக்கது மெய்ப்பாடு எனப்படும். இது தொல்காப்பியம் மெய்ப்பாட்டிற்குத் தருகிற வரைவிலக்கணம் ஆகும்.

## பொதுவான மெய்ப்பாடுகள்

அகம், புறம் எனும் இரண்டிலும் தோன்றுகிற பொதுவான மெய்ப்பாடுகள் எட்டு என்பதைத் தொல்காப்பியம் சுட்டுகிறது. அவை: நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன ஆகும்.

*நகையே அழுகை இளிவரல் மருட்கை*
*அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்*
*றப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப*

(மெய்ப்பாட்டியல் 3)

1. நகை - சிரிப்பு
2. அழுகை - அவலம்
3. இளிவரல் - இழிந்த நிலை
4. மருட்கை - வியப்பு / அற்புதம் / அதிசயம் / விந்தை
5. அச்சம் - பயம்
6. பெருமிதம் - பெருமை / மிகுந்த மதிப்புடைமை
   (உரையாசிரியர்கள் "வீரம்" என்பர்)
7. வெகுளி - சினம் / கோபம் / ருத்திரம்
8. உவகை - மகிழ்ச்சி.

தொல்காப்பியம், எட்டுச் சுவைகளும் தோன்றுவதற்கான நந்நான்கு காரணச் செயல்களைக் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நகைச்சுவை

*எள்ளல் இளமை பேதைமை மடனென்*
*றுள்ளப் பட்ட நகைநான் கென்ப*

(மெய்ப்பாட்டியல் 248)

எள்ளல் - இகழ்தல், கேலிசெய்தல்

இளமை - இளமைப் பருவத்து அறியாமையால் பிறர் செயலைத் தாழ்வாகக் கருதுதல், இளமை காரணமான பேச்சு, செயல் காரணமாகவும் சிரிப்பு உண்டாகும்.

பேதைமை - அறியாமை. ஒன்றனைத் தெளிவாக அறியாது விவரிக்குமிடத்துச் சிரிப்பு உண்டாகும். வேற்று மொழியினர் நம் மொழியைப் பிழையாகப் பேசுமிடத்தும் சிரிப்பு உண்டாகும்.

மடன் - மடமை. பிறரிடம் கேட்டவற்றை ஆராயாது, உண்மையானவை என்று நம்பிப் பேசுமிடத்துச் சிரிப்பு உண்டாகும்.

2. அழுகைச்சுவை

*இழிவே இழவே அசைவே வறுமையென*
*விளிவில் கொள்கை அழுகை நான்கே*

(மெய்ப்பாட்டியல் 249)

இழிவு - இழிவுபடுத்தல்

இழவு - இழப்பு

அசைவு - சோம்பல் காரணமாக உயர்நிலையை இழத்தல்

வறுமை - துய்ப்பன துய்க்கப்பெறா இன்மை நிலை.

3. இளிவரற்சுவை

*மூப்பே பிணியே வருத்தம் மென்மையோ*
*டியாப்புற வந்த இளிவரல் நான்கே*

(மெய்ப்பாட்டியல் 250)

மூப்பு - வயது முதிர்வு

பிணி - தீராத நோயுறுதல்

வருத்தம் - துன்பம், துயரத்தால் தொடரப்படுதல்

மென்மை - எளியராதல், இயலாமை.

(இவை நான்கும் இயலாமை எனும் உணர்வைத் தோற்றுவனவே)

4. மருட்கைச் சுவை

*புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு*
*மதிமை சாலா மருட்கை நான்கே*

(மெய்ப்பாட்டியல் 251)

புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் (ஆக்கப்படுவன) எனும் நான்கும் ஒருவர் தாம் கண்டவற்றினும் அறிந்தவற்றினும் மாறாக அமையும் போது வியப்புக்கு ஆளாவார். "அணுவைத் துளைத் தேழ்கடலைப் புகட்டி" என்பது போன்ற நிலை, வியப்பினைத் தரும்.

5. அச்சச்சுவை

*அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்*
*பிணங்கல் சாலா அச்சம் நான்கே*

(மெய்ப்பாட்டியல் 252)

அணங்கு - பேய், பூதம், மோகினி

விலங்கு - புலி, யானை, சிங்கம் போல்வன

கள்வர் - திருடர்

இறை - தெய்வம்

6. பெருமிதச்சுவை

*கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்*
*சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே*

(மெய்ப்பாட்டியல் 253)

பெருமிதத்தை உரையாசிரியர்கள் வீரம் என்பர். கல்வி, தறுகண், புகழ், கொடை ஆகியவற்றால் பிறரின் மிகுந்த பெருமை உடையோராகுமிடத்து, பெருமிதம் உண்டாகும். தறுகண் - துணிச்சல், தைரியம், வீரம்.

7. வெகுளிச்சுவை

*உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற*
*வெறுப்ப வந்த வெகுளி நான்கே*

(மெய்ப்பாட்டியல் 254)

உறுப்பறை - உடலுறுப்பு அறுக்கப்படுதல், சிதைக்கப்படுதல்

குடிகோள் - தன்னால் பாதுகாக்கப்படுவோருக்குக் கேடு உண்டாக்குதல்

அலை - அடித்தல், வைதல் எனத் துன்பத்திற்கு ஆட்படுதல்

கொலை - கொல்ல முயலுதல், கொலைசெய்தல் (இவை நான்கின் காரணமாக வெறுப்புண்டாகி வெகுளி தோன்றும்)

8. உவகைச்சுவை

*செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென*
*அல்லல் நீத்த உவகை நான்கே*

(மெய்ப்பாட்டியல் 255)

புலன் - ஐம்புலன்களின் நுகர்ச்சி. புணர்வு - கலவி, கூடல்

(துயரம் நீங்கிய நிலையே உவகைச் சுவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அகத்திணை மெய்ப்பாடுகள்

தொல்காப்பியம் அகவொழுக்கத்தில் தலைவியின் மனம், உணர்வுகள் பலவற்றை வகைப்படுத்தி விதிகள் அமைத்துள்ளது. அவற்றை உரையாசிரியர்கள் அவத்தைகள் என விளக்குகின்றனர். அவை யாவும் களவொழுக்கத்தின் போதும் வரைந்து இல்லறம் புரியும் காலத்ததாகிய கற்பொழுக்கத்தின் போதும் தோன்றுகின்ற உணர்வுகள் ஆகும்.

இன்புறல், நடுவுநிலை, அருளல், அடக்கம், அன்பு, வாழ்த்தல், நாணுதல், முனிதல், அரற்றல், பொச்சாப்பு, பொறாமை போல்வன பண்புகளின் அடிப்படையிலான உணர்வுகள் ஆகும். இவை அகம், புறம் இரண்டற்கும் பொதுவானவை; எனினும் அக இலக்கியத்தின் பயிற்சி, வரவேற்புக் காரணமாகத் தமிழ் இலக்கண நூல்கள் அகத்திணை நிகழ்வுகளுக்கும் முதன்மை கொடுத்துள்ளமையால் இவ்வுணர்வுகள் அகத்திணைப் பட்டியலில் விவரிக்கப் பெற்றுள்ளன.

புகுமுகம்புரிதல், கூழைவிரித்தல், உண்டி குறைதல், கண்துயில் மறுத்தல் போன்றவை களவொழுக்கத்திலும் இடம்பெறும் காதல் உணர்வை வெளிப் படுத்துவன ஆகும். இத்தகைய குறிப்புக்களையும் தொல்காப்பியம் மெய்ப்பாடு என்று விவரிக்கின்றது.

தொல்காப்பிய மெய்ப்பாட்டுச் செய்திகள், மெய்ப்பாடுபற்றிய விரிவான வரைவிலக்கணத்தினைப் புலப்படுத்துகின்றன. நகை, அழுகை போன்ற உள்ளத்து உணர்ச்சியை வெளிப்படுத்தும் முகத்தின் குறிப்பு மொழிகள் மட்டுமன்றிக் கூந்தல், கை போன்ற உறுப்புக்களின் பண்புகளும் உள்ளத்து வேட்கையினை வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகளாகக் கருதத்தக்கன என்பதனைத் தொல்காப்பிய விவரிப்பு நன்கு வெளிப்படுத்துகிறது.

### இலக்கண விளக்கம்

கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் வைத்திய நாத நாவலரால் (வைத்தியநாத தேசிகரால்) எழுதப்பெற்றது இலக்கண விளக்கம். இந்நூல் தொல்காப்பியச் செய்திகளைப் பெரிதும் வழிமொழிதலால் குட்டித் தொல்காப்பியம் எனக் கூறப்படுகிறது. பல நூற்பாக்களை நன்னூலிலிருந்து தழுவிய போதிலும் நூலாசிரியர் உரைவழித் தொல்காப்பியத்தைத் தொடர்கிறார். இந்நூல் தொல்காப்பியம் தனியியலில் விவரிக்கிற மெய்ப்பாட்டியல் இலக்கணத்தை அகத்திணையியலின் இறுதியில் உவமைகளுக்கு (உள்ளுறையுவமை, வெளிப்படை உவமைக்கு) முன்னர் விவரிக்கிறது.

"கவிப்பொருள் உணர்த்த அதனானே சொல்லப்படும் பொருள் உய்த்து வேறு கண்டாங்கு அறிதலை மெய்ப்பாடு என்றார். அது தேவர் உலகம் கூறினும் அதனைக் கண்டாங்கு அறியச்செய்தல் செய்யுள் உறுப்பாம் என்றவாறாம். ஆகவே மெய்ப்பாடு பொருட்பாடு ஆயிற்று என்பது. அது,

*மையற விளங்கிய மணிமருள் அவ்வாய்தன்*
*மெய்பெறா மழலையின் விளங்குபூண் நனைத்தர*
என்றாற் போல்வது." (கலித்தொகை 81)

இவ்வாறு தேசிகர் உரைவிளக்கம் தருகிறார்.

'குற்றமற விளங்கிய செம்மணி போன்ற வாயிலிருந்து மழலையோடு வரும் எச்சில் நீரிலே மார்பில் அணிந்த அணிகலம் நனைய ' என்ற தொடரால் மழலைமொழி பேசி ஊற, வரும் அழகிய குழந்தை 'நம் கண்முன் நிறுத்தப்பட்டது போன்ற எண்ணம் தோன்றுதல் காண்க' எனத் தேசிகரின் விளக்கத்தைப் பேரறிஞர் தி.வே. கோபாலையர் தெளிவாக்குகிறார்.

மெய்ப்பாடு எனப்படுவது செய்யுள் அல்லது இலக்கியத்தின் கருத்தினை வெளிப்படுத்தும் ஓர் விவரிப்பு உத்தி என்பது தமிழ் இலக்கண நூல்களின் கொள்கை ஆகும்.

தமிழ்ப் பண்பாட்டில் அகவொழுக்கம் பிறரிடம் வெளிப்பட விவரித்தற்கு உரியதன்று என்பதால், குறிப்பாகப் புலப்படுத்துவதாகிய மெய்ப்பாடு, அகவொழுக்கத்திற்கு இன்றியமையாதது ஆகிறது. அதனாலேயே இலக்கண விளக்கம் மெய்ப்பாட்டு இலக்கணத்தை அகத்திணையியலின் ஓருறுப்பாக்கிக் கூறுகிறது. ■

"காதல் வாழ்க்கையில் இன்பம் சேர்ப்பது; உலக வாழ்வியலுக்கு உயிர்ப்பானது. இக்காதலுக்கு அரணாக அமைவது வீரம். வீரமே காதலை நிறைவு செய்யவல்லது. எனவே அகப்பாடல்களையும் வீரயுகப் பாடல்களின் விழுதுகள் எனில் தவறாகாது.

- பெ.சுயம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாப்பிலக்கணம்

(தொடர் 5)



**முனைவர் பி. பாலசுப்பிரமணியன்**
**(Dr. P. Balasubramanian)**
*உதவிப் பேராசிரியர்,*
*முதுகலைத் தமிழாய்வுத்துறை,*
*பச்சையப்பன் கல்லூரி,*
*சென்னை, தமிழ்நாடு, இந்தியா.*

## தளை

செய்யுள், ஓசையை அடிப்படையாகக் கொண்டது. செய்யுளின் ஓசை அமைப்பு, சீர்கள் ஒன்றையொன்று தொடரும் முறையைப்பற்றியதாகும். ஒரு சீர் அடுத்து வரும் சீரோடு இணையும் முறையைத் **தளை** என்று குறிப்பிடுவர்.

தளை என்பதற்குக் கட்டு, பிணை, கூடும்முறை எனப் பல பொருள்கள் உண்டு. இங்கு சீர்களை ஓசையால் கட்டுவதால், பிணைப்பதால் தளை என வழங்கப்படுகிறது.

“வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பாவகைகளுக்குத் தனித்தனியே ‘ஓசை அமைதிகள்’ உள்ளன. இந்த ஓசை அமைதி, கட்டுப்பாடு, ஒழுங்கு, அமைப்பு, வரையறை முதலாயினவெல்லாம் ஒரு சீரானது தொடர்ந்து வரும் அடுத்த சீரோடு தொடரும் முறையை / கொள்ளும் உறவை அடிப்படையாகக் கொண்டு இயல்வனவாம். இவ்வாறாகச் சீர்களுக்கு இடையே அமையும் உறவையே ‘தளை’ என்பர்” என்று குறிப்பிடுவார் மருதூர் அரங்கராசன்.

‘சீரோடு சீர் தலைப்பெய்வது தளை’என்று யாப்பருங்கலம் (நூ.17) குறிப்பிடும்.
‘சீரிரண்டு தட்டு (பொருந்தி) நிற்றல் தளை’ என்று அறிஞர் கூறுவர்.

தளைக்கப்படுவது தளை எனப்படும். எழுத்துகள் சேர்ந்து அசையாவது போல், அசைகள் சேர்ந்து சீராவது போல், சீர்கள் இணைந்து தளையாவது இல்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஓசையால் உந்தித் தள்ளப்பட்டு நிற்பது தளை ஆகும். ஆகவே, இரண்டு சீர்களுக்கு இடையே உள்ள உறவைக் (பந்தத்தை) குறிப்பது தளையாகும்.

‘பந்தம் எனப் பெயர் பகரப்படுமே’ என்று காக்கைபாடினியமும் ‘பந்தம் அடி தொடை பாவினம் கூறுவன்’ என்று காரிகையும் ‘தளையைப் பந்தம் என்பாரும் பலர்’ என்று பிற அறிஞர்கள் கூறுவதும் கவனத்திற்குரியனவாகும். தளைக்குப் பந்தம் (உறவு – தொடர்பு) என்ற ஒரு பொருள் இருந்துள்ளமையையும் மேற்கண்ட சான்றுகள்வழி அறிந்துகொள்ள முடிகிறது.

யாப்பருங்கலக்காரிகை தளையை செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறது. ஆனால், தொல்காப்பியப் பொருளதிகாரத்திலுள்ள செய்யுளியல் 26 உறுப்புகளுடன் வனப்பு எட்டையும் இணைத்து 34 செய்யுள் உறுப்புகளை அடையாளப்படுத்துகிறது. இவ்உறுப்புகளில் தளை ஒரு செய்யுள் உறுப்பாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. இருப்பினும் தளை என்ற சொல்லைப் பல்வேறு நூற்பாக்களில் (கலித்தளை மருங்கின், ஆசிரியத்தளை என்று, வெண்டளை விரவியும்…) தொல்காப்பியர் பதிவு செய்திருக்கிறார் என்பதைக் காண முடிகிறது. அதனால் பிற்காலத்து எழுந்த யாப்பிலக்கண அறிஞர்கள் தளையை ஓர் உறுப்பாகக் கொள்வதில் பெரும் சிக்கல் இல்லை எனக் கருதியிருக்கலாம். ‘உறவை உறுப்பென்று கொள்வதில் தொல்காப்பியருக்கு ஏற்பட்ட தயக்கமே, அவர் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகத் தளையைக் கொள்ளாமைக்குக் காரணம் எனலாம்’ என்று மருதூர் அரங்கராசன் குறிப்பிடுகிறார்.

‘சீரொடு சீர்தலைப் பெறுவதுதளை அவை
ஏழென மொழிப இயல் புணர்ந்தோரே’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நூற்பாவின்வழி தளைக்கு விளக்கமும் தளையின் வகைமையையும் குறிப்பிடுகிறது யாப்பருங்கலம்.

*தண்சீர் தனதொன்றிற் றன்றளை யாந்தண வாதவஞ்சி*
*வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்துவல் லோர்வகுத்த*
*வெண்சீர் விகற்பங் கலித்தளை யாய்விடும் வெண்டளையாம்*
*ஒண்சீ ரகவ லுரிச்சீர் விகற்பமு மொண்ணுதலே.*

ஒளி பொருந்திய நெற்றியை உடைய பெண்ணே, நின்ற சீரின் இறுதி அசையும் வரும் சீரின் முதல் அசையும் ஒன்றாகப் பொருந்தி வரும் சிறப்புடைய தளை தன்தளையாகும். அதாவது ஆசிரிய உரிச்சீராகிய (ஈரசைச்சீர்) மாச்சீர், விளச்சீர் நின்று, வரும் சீரின் முதலசையோடு நேராய் ஒன்றுவது நேரொன்றிய ஆசிரியத்தளை (**தேமா, புளிமா முன் நேர்**). நிரையாய் ஒன்றுவது நிரையொன்றிய ஆசிரியத்தளை (**கருவிளம், கூவிளம் முன் நிரை**). வெண்பா உரிச்சீராகிய (மூவசைச்சீர்) காய்ச்சீர் நின்று, வரும் சீரின் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளை (**தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் முன் நேர்**) என அழைக்கப்படும். வஞ்சி உரிச்சீராகிய (மூவசைச்சீர்) கனிச்சீர் நின்று, வரும் சீரின் முதலசையோடு ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளை (**தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி முன் நிரை**). ஒன்றி வரக்கூடிய அனைத்தையும் சிறப்புடைய தளை என்பர்.

வஞ்சி உரிச்சீராகிய (மூவசைச்சீர்) கனிச்சீர் நின்று, வரும் சீர் முதலசையோடு ஒன்றாமல் வந்தால் அது ஒன்றாத வஞ்சித்தளையாகும் (**தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி முன் நேர்**).

வல்லவர்களால் வகுத்துக் கூறப்பட்ட வெண்பா உரிச்சீராகிய (மூவசைச்சீர்) காய்ச்சீர் நின்று, வரும் சீரின் முதலசையோடு ஒன்றாமல் வருவது கலித்தளை (**தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் முன் நிரை**) என அழைக்கப்படும்.

ஆசிரிய உரிச்சீராகிய (ஈரசைச்சீர்) மாச்சீர் நின்று, வரும் சீரின் முதலசை நிரையாய் ஒன்றாமல் வருவதும் (**தேமா, புளிமா முன் நிரை**) விளச்சீர் நின்று, வரும் சீரின் முதலசை நேராய் நின்று ஒன்றாமல் வருவது இயற்சீர் வெண்டளை (**கருவிளம், கூவிளம் முன் நேர்**). மா முன் நேர் விளம் முன் நிரை என்று அமைவது இயற்சீர் வெண்டளை ஆகும்.

இதனடிப்படையில் ஒன்றிய தளைகள், ஒன்றாத தளைகள் என்று தளையை ஏழு வகைமையாகப் பிரித்துக் கூறுவர்.

*'நின்றசீர் ஈறும் வருஞ்சீர் முதலசையும்*
*ஒன்றியும் ஒன்றாதும் ஓசைகொள - நின்றால்*
*வளையொன்று முன்கையாய்! வந்ததனை வல்லோர்*
*தளையென்று கட்டுரைப்பார் தாம்'*

என்ற யாப்பருங்கல விருத்தி நூற்பா ஒன்றிய, ஒன்றாத தளைபற்றிக் குறிப்பிடுகிறது.

*'தன்சீர் தனதோடு ஒன்றலும் உறழ்தலும்*
*என்றிரண்டு ஆகும் இயம்பிய தளையே'*

என்று ஒன்றியதளை, ஒன்றாத தளை குறித்து இலக்கண விளக்கம் நூல் குறிப்பிடும். நின்ற சீரை 'நிலைச்சீர்' என்றும் வரும்சீரைத் 'தொடுசீர்' என்றும் குறிப்பிடுவர்.

பொதுநிலையில் தளையை ஒன்றியதளை (நேர் முன் நேர், நிரை முன் நிரை), ஒன்றாத தளை (நேர் முன் நிரை, நிரை முன் நேர்) என்று இரண்டு வகையாகப் பிரித்துக் கூறுவர். சிறப்பு நிலையில் தளையை ஏழு வகையாகப் பிரித்துக் காட்டுவர்.

1. வெண்டளை – இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை
2. ஆசிரியத்தளை – நேரொன்றிய ஆசிரியத்தளை, நிரையொன்றிய ஆசிரியத்தளை.
3. கலித்தளை
4. வஞ்சித்தளை – ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஒன்றிய தளைகள் (4) | ஒன்றாத தளைகள் (3) |
|---|---|
| நேரொன்றிய ஆசிரியத்தளை<br>நிரையொன்றிய ஆசிரியத்தளை<br>வெண்சீர் வெண்டளை<br>ஒன்றிய வஞ்சித்தளை | இயற்சீர் வெண்டளை<br>கலித்தளை<br>ஒன்றாத வஞ்சித்தளை |

**தளை வகைகள்**

| வாய்பாடு | தளை | பா |
|---|---|---|
| மா முன் நேர் | நேரொன்றிய ஆசிரியத்தளை | ஆசிரியப்பா |
| விளம் முன் நிரை | நிரையொன்றிய ஆசிரியத்தளை | ஆசிரியப்பா |
| மா முன் நிரை விளம் முன் நேர் | இயற்சீர் வெண்டளை | வெண்பா |
| காய் முன் நேர் | வெண்சீர் வெண்டளை | வெண்பா |
| காய் முன் நிரை | கலித்தளை | கலிப்பா |
| கனி முன் நிரை | ஒன்றிய வஞ்சித்தளை | வஞ்சிப்பா |
| கனி முன் நேர் | ஒன்றாத வஞ்சித்தளை | வஞ்சிப்பா |

**நேரொன்றிய ஆசிரியத்தளை (மா முன் நேர்)**

ஒரு பாடலில் முதற்சீர் ஈற்றசை மாச்சீராக இருந்து வருஞ்சீரின் முதலசை நேர் அசையாக வந்தால் அதனை நேரொன்றிய ஆசிரியத்தளை என அழைப்பர்.

சான்று:

**போது சாந்தம் பொற்ப ஏந்தி**
**ஆதி நாதன் சேர்வோர்**
**சோதி வானம் துன்னு வாரே.**

போது (நேர்நேர் - தேமா) சாந்தம் (நேர்நேர் - தேமா)

மா முன் நேர்

இதே போன்று நின்ற சீரின் ஈற்றசை தேமா, புளிமா என்று வந்து வரும்சீரின் முதலசை நேர் என்று வருகிறபோது அதனை நேரொன்றிய ஆசிரியத்தளை என அடையாளம் காண முடியும். தொடர்ந்து அடுத்தடுத்த சீர்களை அசைபிரித்துத் தளையைக் கண்டடையலாம்.

**நிரையொன்றிய ஆசிரியத்தளை (விளம் முன் நிரை)**

ஒரு பாடலில் முதற்சீர் ஈற்றசை விளச்சீராக இருந்து வருஞ்சீரின் முதலசை நிரை அசையாக வந்தால் அதனை நிரையொன்றிய ஆசிரியத்தளை என அழைப்பர்.

சான்று:

**அணிநிழல் அசோகமர்ந் தருள்நெறி நடாத்திய**
**மணிதிகழ் அவிரொளி வரதனைப்**
**பணிபவர் பவம்நனி பரிசறுப் பவரே.**

அணிநிழல் (நிரைநிரை – கருவிளம்) அசோகமர்ந் (நிரைநிரை – கருவிளம்)

விளம் முன் நிரை

இதே போன்று நின்ற சீரின் ஈற்றசை கருவிளம், கூவிளம் என்று வந்து வரும்சீரின் முதலசை நிரை என்று வருகிறபோது அதனை நிரையொன்றிய ஆசிரியத்தளை என அடையாளம் காண முடியும். தொடர்ந்து அடுத்தடுத்த சீர்களை அசைபிரித்துத் தளையைக் கண்டடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கண்ட இரண்டு ஆசிரியத்தளைகளும் ஆசிரியப்பாவில் பயின்றுவரும். தளையின் இலக்கணத்தை நன்கு அறிந்து கொண்டால் பாடலடிகளின் இரண்டு சீர்களைக் கொண்டே அது என்ன பாவகையில் அமைந்த செய்யுள் எனக் கண்டுபிடித்துவிட முடியும்.

சங்க இலக்கியப் பாடல்கள் பெரும்பாலும் ஆசிரியப்பாவில் பாடப்பட்டவை. குறுந்தொகையில் ஒரு பாடலை எடுத்துக்கொண்டு சீரில் உள்ள அசையைப் பிரித்து, தளையறியலாம். ஒரே பாடலில் நேரொன்றிய ஆசிரியத் தளையும் நிரையொன்றிய ஆசிரியத்தளையும் இடம்பெறுவதைக் காணலாம்.

சான்று:

'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி ....'

இதனை ஒரு பயிற்சியாகக் கொண்டால் யாப்பிலக்கணத்தை நன்றாகப் புரிந்து கொள்ளலாம்.

**இயற்சீர் வெண்டளை (மா முன் நிரை விளம் முன் நேர்)**

ஒரு பாடலில் முதற்சீர் ஈற்றசை மாச்சீராக இருந்து வருஞ்சீரின் முதலசை நிரையாகவும் முதற்சீர் ஈற்றசை விளச்சீராக இருந்து வருஞ்சீரின் முதலசை நேராகவும் வந்தால் அதனை இயற்சீர் வெண்டளை என அழைப்பர்.

சான்று:

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

ஈன்றாள் (நேர்நேர் – தேமா) பசிகாண்பான் (நிரைநேர்நேர் – புளிமாங்காய்)

மா முன் நிரை

இதே போன்று நின்ற சீரின் ஈற்றசை தேமா, புளிமா என்று வந்து வரும்சீரின் முதலசை நிரை என்று வருகிற போதும் நின்ற சீரின் ஈற்றசை கருவிளம், கூவிளம் என்று வந்து வரும்சீரின் முதலசை நேர் என்று வருகிற போதும் அதனை இயற்சீர் வெண்டளை என அடையாளம் காண முடியும். தொடர்ந்து அடுத்தடுத்த சீர்களை அசைபிரித்துத் தளையைக் கண்டடையலாம். இயற்சீர் வெண்டளை வெண்பாவில் இடம்பெறும்.

**வெண்சீர் வெண்டளை (காய் முன் நேர்)**

ஒரு பாடலில் முதற்சீர் ஈற்றசை காய்ச்சீராக (தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய்) இருந்து வருஞ்சீரின் முதலசை நேராக வந்தால் அதனை வெண்சீர் வெண்டளை என அழைப்பர்.

சான்று:

எண்ணிய எண்ணியாங்கு எய்து எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

எண்ணியாங்கு (நேர்நிரைநேர் – கூவிளங்காய்) எய்து (நேர்நேர் – தேமா)

காய் முன் நேர்

இதே போன்று நின்ற சீரின் ஈற்றசை தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் என்று வந்து வரும்சீரின் முதலசை நேர் என்று வருகிற போது அதனை வெண்சீர் வெண்டளை என அடையாளம் காண முடியும். தொடர்ந்து அடுத்தடுத்த சீர்களை அசைபிரித்துத் தளையைக் கண்டடையலாம். இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வெண்பாவில் இடம்பெறும். தமிழில் அற இலக்கியங்கள், தனிப்பாடல்கள் பெரும்பாலும் வெண்பாவில் பாடப்பெற்றுள்ளதால் அதிலிருந்து ஒரு பாடலை எடுத்துப் பயிற்சி செய்யலாம்.

**கலித்தளை (காய் முன் நிரை)**

ஒரு பாடலில் முதற்சீர் ஈற்றசை காய்ச்சீராக (தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய்) இருந்து வருஞ்சீரின் முதலசை நிரையாக வந்தால் அதனைக் கலித்தளை என அழைப்பர்.

சான்று

'செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வப்போர்க் (நேர்நேர்நேர் – தேமாங்காய்) கதக்கண்ணன் (நிரைநேர்நேர் – புளிமாங்காய்)

காய் முன் நிரை

இதே போன்று நின்ற சீரின் ஈற்றசை தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் என்று வந்து வரும்சீரின் முதலசை நிரை என்று வருகிற போது அதனை கலித்தளை என அடையாளம் காண முடியும். தொடர்ந்து அடுத்தடுத்த சீர்களை அசைபிரித்துத் தளையைக் கண்டடையலாம். கலித்தளை கலிப்பாவில் இடம்பெறும். தொல்காப்பியத்திற்கு முன்பும் தொல்காப்பியர் காலத்திலும் அகப்பாடல்கள் கலிப்பாவில் பாடப்பெற்றதாகத் தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியல் நூற்பா குறிப்பிடும். தமிழில் கலித்தொகை நூல் கலிப்பாவால் பாடப்பெற்றுள்ளதால் அதிலிருந்து ஒரு பாடலை எடுத்துப் பயிற்சி செய்யலாம்.

ஒன்றிய வஞ்சித்தளை (கனி முன் நிரை)

ஒரு பாடலில் முதற்சீர் ஈற்றசை கனிச்சீராக (தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி) இருந்து வருஞ்சீரின் முதலசை நிரையாக வந்தால் அதனை ஒன்றிய வஞ்சித்தளை என அழைப்பர்.

சான்று:

'வெண்சாமரை புடைபெயர்தர'

வெண்சாமரை (நேர்நேர்நிரை – தேமாங்கனி) புடைபெயர்தர (நிரைநிரைநிரை – கருவிளங்கனி)

கனி முன் நிரை

இதே போன்று நின்ற சீரின் ஈற்றசை தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி என்று வந்து வரும்சீரின் முதலசை நிரை என்று வருகிற போது அதனை ஒன்றிய வஞ்சித்தளை என அடையாளம் காண முடியும். தொடர்ந்து அடுத்தடுத்த சீர்களை அசைபிரித்துத் தளையைக் கண்டடையலாம். ஒன்றிய வஞ்சித்தளை வஞ்சிப்பாவில் இடம்பெறும்.

ஒன்றாத வஞ்சித்தளை (கனி முன் நேர்)

ஒரு பாடலில் முதற்சீர் ஈற்றசை கனிச்சீராக (தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி) இருந்து வருஞ்சீரின் முதலசை நேராக வந்தால் அதனை ஒன்றாத வஞ்சித்தளை என அழைப்பர்.

சான்று:

'பூந்தாமரை போதலமரத்'

பூந்தாமரை (நேர்நேர்நிரை – தேமாங்கனி) போதலமரத் (நேர்நிரைநிரை – கூவிளங்கனி)

கனி முன் நேர்

இதே போன்று நின்ற சீரின் ஈற்றசை தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி என்று வந்து வரும்சீரின் முதலசை நேர் என்று வருகிறபோது அதனை ஒன்றாத வஞ்சித்தளை என அடையாளம் காண முடியும். தொடர்ந்து அடுத்தடுத்த சீர்களை அசைபிரித்துத் தளையைக் கண்டடையலாம். ஒன்றாத வஞ்சித்தளை வஞ்சிப்பாவில் இடம்பெறும். மேற்கண்டவாறு ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை இரண்டுமே வஞ்சிப்பாவில் இடம்பெறும். குமரகுருபரர் இயற்றிய சிதம்பரச் செய்யுட்கோவையில் வஞ்சிப்பாவில் அமைந்த பாடல்கள் உள்ளன. அப்பாடல்களைத் தேர்ந்தெடுத்து அசைபிரித்து தளையைக் காணலாம்.

தளைபற்றிய விளக்கம், வகைமை, வாய்பாடு அறிந்து கொண்டால் பாடலடிகளைக் கொண்டு அது என்ன வகைமையில் அமைந்த பா என்று கண்டுபிடிக்க முடியும். இதையே ஒரு பயிற்சி முறையாக்கலாம். தளை அறிதலின் வழி மரபுக்கவிதை எழுதும் ஆற்றல் பெற முடியும் என்பதையும் அறிய வேண்டியிருக்கிறது.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. பொ. த (உயர் தரம்) - தமிழ்

 அன்புள்ள மாணவர்களே,

எல்லா வினாக்களுக்கும் விடையளியுங்கள். 1-10 வரையுள்ள வினாக்களுள் ஒரு வினா ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகளைக் கொண்டுள்ளது. அவ்வினாவின் இலக்கம், அவ்வினாவின் ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஆகியவற்றை மட்டும் இச்சஞ்சிகையின் முகவரிக்கு **15.12.2024**க்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவையுங்கள். முதல் மூவருக்குத் தக்க பரிசில் வழங்கப்படும். பாடசாலையின் பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக. (ஆ-ர்)

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 தோற்றினான் - இதன் இடைநிலை
(1) இ (2) இனான் (3) ன் (4) னான் (5) இன் (.........)

1.2 பின்வருவனவற்றுள் பகுதி விகாரப்படாதது
(1) தந்தான் (2) வருகின்றான் (3) வாழ்கின்றான் (4) தேற்றினான் (5) கண்டான் (.........)

1.3 பின்வருவனவற்றுள் சந்தி இடம்பெற்றிருப்பது
(1) கொடுத்தான் (2) அழுதான் (3) வாழ்தல் (4) கோழிகள் (5) விட்டான் (.........)

1.4 விகாரப் புணர்ச்சி அல்லாதது
(1) ஆட்சி (2) காலழகு (3) பெற்றேன் (4) கண்ணிமை (5) செத்தான் (.........)

1.5 சாரியை இடம்பெற்றிருக்கும் சொல்
(1) இன்னும் (2) புகைத்தல் (3) போனான் (4) வந்தனன் (5) செய்தான் (.........)

1.6 குற்றியலுகரப் புணர்ச்சி
(1) பத்துப்பாட்டு (2) பசுக்கூட்டம் (3) கனவுலகம் (4) வாயுக்கள் (5) கன்று (.........)

1.7 குற்றியலுகரம் கெட்டுப் புணர்ந்திருப்பது
(1) கன்றுகள் (2) கன்றுக்குட்டி (3) கன்றழகு (4) கொண்டுபோ (5) இன்று வா (.........)

1.8 பின்வருவனவற்றுள் நிலைமொழியீற்று வல்லினம் இரட்டித்துப் புணர்ந்திருப்பது
(1) ஆற்றோரம் (2) காற்றோட்டம் (3) அடிவானம் (4) வீடுவாசல் (5) பலாவிதை (.........)

1.9 பின்வருவனவற்றுள் மெய்யீற்றுப் புணர்ச்சி
(1) விலைப்பட்டியல் (2) பொன்னாரம் (3) பூச்செடி (4) பலாவிலை (5) கலைகள் (.........)

1.10 பின்வருவனவற்றுள் உயிரும் உயிரும் புணர்ந்திருப்பது
(1) தேர்வுநாடி (2) பண்புகள் (3) வளையோசை (4) நோயால் (5) தலைவலி (.........)

சென்ற இதழில் இடம்பெற்ற வினாக்களுக்கான விடை - க.பொ.த (உயர்தரம்) - தமிழ்

1.1 - **(1)** 1.2 - **(2)** 1.3 - **(5)** 1.4 - **(4)** 1.5 - **(3)**

1.6 - **(1)** 1.7 - **(2)** 1.8 - **(1), (3)** 1.9 - **(4)** 1.10 - **(5)**.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க. பொ. த (சாதாரண தரம்) - தமிழ்மொழியும் இலக்கியமும்

■ *அன்புள்ள மாணவர்களே,*

எல்லா வினாக்களுக்கும் விடையளியுங்கள். (i), (x) ஆகிய வினாக்களுக்குரிய விடையை மட்டும் இச்சஞ்சிகையின் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு தபாலில் **15.12.2024**க்கு முன்னர் அனுப்பிவையுங்கள். முதல் மூவருக்குத் தக்க பரிசில் வழங்கப்படும். பாடசாலையின் பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக. (ஆ-ர்)

(i) நாய் குரைக்கிறது. - இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமையின் பெயர் என்ன?

(ii) கடதாசியைக் கிழித்தான். - இதில் இரண்டாம் வேற்றுமையின் என்ன பொருள் உணர்த்தப்படுகின்றது?

(iii) அவன் தன் முயற்சியால் வெற்றிபெற்றான். இதில் மூன்றாம் வேற்றுமையின் என்ன பொருள் உணர்த்தப்படுகின்றது?

(iv) தேடுகின்றன - இதில் வந்துள்ள விகுதியைக் குறிப்பிடுக.

(v) 'பரிணாமம்' என்னும் சொல்லின் பொருள் புலப்படுமாறு ஒரு வாக்கியம் எழுதுக.

(vi) 'பரிகாரம்' என்னும் சொல்லின் பொருள் புலப்படுமாறு ஒரு வாக்கியம் எழுதுக.

(vii) கோது இலான் இந்த மொழி கூறுதலும் - இதில் வந்துள்ள குற்றியலுகரச் சொல் எது? அது எவ்வகைத் தொடர்?

(viii) அல் விகுதி பெற்ற ஆக்கப்பெயர் ஒன்று தருக.

(ix) மார்கழி மாதம் - இது என்ன தொகை?

(x) சந்தி விகாரப்பட்ட சொல் ஒன்று தருக.

(xi) அருவரும் மாறிப் புக்கிதய மெய்தினர். - இதைச் சந்தி பிரித்து எழுதுக.

குறிப்பு: அறிவுறுத்தலுக்கமைய விடையை எழுதி அனுப்புங்கள்.

### சென்ற இதழில் இடம்பெற்ற வினாக்களுக்கான விடை

(i) தனிப் பெயரடை, ஆக்கப் பெயரடை.

(ii) மோசமான பேச்சு, வெள்ளைப் பசு.

(iii) தனிப் பெயரடை - அழகு முல்லை, ஆக்கப் பெயரடை - அழகான முல்லை.

(iv) பெயர் + ஆன / உள்ள

(v) பிரசுரம்: தேர்தல் காலத்தில் வெளியிடப்பட்ட அந்தப் பிரசுரத்தில் அப்படி என்னதான் உண்டு?

(vi) பிரசாரம்: தேர்தல் பிரசாரம் மும்முரமாக நடைபெறுகிறது.

(vii) அந்தக் குதிரை காற்றைவிட வேகமாக ஓடும்.

(viii) துன்பக்கேணி

(ix) பண்புத் தொகை

(x) வினைத்தொகை

(xi) ஆடி + குடத்து + அடையும் + ஆடும் + போதே + இரையும்

(xii) கோ + இல், கோ + வில்.

■■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சந்தா - 2025


இது,
இந்த 'இலக்கணம்' சஞ்சிகைக்கானது.
இது 2025க்குரியது.
இது ஒரு வருடத்துக்கான சந்தா.


04 x 300.00 = 1200.00 (இலங்கை ரூபாய்)
04 x 150.00 = 600.00 (இந்திய ரூபாய்)
தபாலில் தனியாகவோ கூட்டாகவோ பெற விரும்பின் அச்செலவு தனியாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.


இலக்கணத்தில் அக்கறைகொண்ட மற்றைய
வெளிநாட்டவரும் 'இலக்கணம்' சஞ்சிகையைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் தொடர்புகொள்க.


தொடர்பு : +94 714496681 djuwan58@gmail.com













9 772961 571004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு, இலங்கை. 065 2053060